Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-14

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | ஐப்பசி-03 | 19-10-2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை -244

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10477) T.P: 024-222 4247



# பலமுனைச் சவால்களுக்கு மத்தியிலும் போர்நிறுத்தத்தைப் பேணி வருகிறோம்!

## ஐரோ.ஆணைக்குழு பிரதித்தலைவரிடம் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(புறுசெல்ஸ்)

**போர்நிறுத்த உடன்படிக்கையை பங்கப்படுத்தும் வகையில் பல்வேறு ஆயுதக் குழுக்களின் வன் முறைகள் உட்பட பலமுனைச் சவால்களுக்கு முகம் கொடுத்த போதிலும் விடுதலைப்புலிகள் போர்நிறுத்த உடன்படிக்கைகளைப் பேணி வருகின்றோம் என நேற்று முன்தினம் பெல்ஜியத் தலைநகர் புறுசெல்ஸில் ஐரோப்பிய ஆணைக்குழுவின் பிரதிப்பணிப்பாளர் நாயகம் ஹேரிப்ஜோவான் கீனுடனான சந்திப்பின் போது புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்; இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக பிரதான எதிர்க்கட்சியும் எதிர்அமைப்புக்களும் அரசாங்கத்தின் சமாதான நகர்வுகளுக்கு ஆதரவளித்துத் தொண்டாற்றின.

ஆகவே தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் வரும் ஆதரவை ஏற்றுநடப்பது அதன் கடமையாகும்.

தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பாக தமிழ்ச்செல்வன் கருத்துத் தெரிவிக்கையில் விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக அதிகார சபை தொடர்பான திட்ட முன்வரைபானது சந்தேகத்துடனும் தனிராச்சியத்திற்

(14 ஆம் பக்கம் பார்க்க)



## ஏறாவூரில் முஸ்லிம் இளைஞர் ஆயுதங்களுடன் கைது

மட்டக்களப்பு ஏறாவூர் தொடரூந்து நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு முஸ்லிம் இளைஞரொருவர் ரி-56 ரக துப்பாக்கிகளுடன் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏ.எம்.மொகமட் பரீட் என்ற இந்த இளைஞர் ஆயுதங்களுடன் பயணம் செய்வதாக கிடைத்த தகவலையடுத்து அங்கு விரைந்து சென்ற பொலிசார் இவரை கைது செய்துள்ளனர். இவரிடம் இருந்து ரி.56 ரகத் துப்பாக்கிகள் இரண்டு மகசீன்கள் என்பன மீட்கப்பட்டன. பொலநறுவை கல்லல்ல பகுதியில் இந்த ஆயுதத்தை விற்பனை செய்வதற்காக மட்டக்களப்பு - கொழும்பு இரவு (14 ஆம் பக்கம் பார்க்க)

## போ என்று சொல்லும் முன் வாவென்று கூற எங்களுக்கென்றொரு நாடு வேண்டும்!

*– பாரிஸில் நினைவெழுச்சி நிகழ்வில் வே. பாலகுமாரன்*

போ என்று சொல்லி புலம் பெயர்ந்த மக்களை அவர்களுக்குப் புகலிடம் கொடுத்த நாடுகள் நாள் குறிப்பதற்கு முன் வா என்று சொல்ல எங்களுக்கென்று ஒரு நாட்டை உருவாக்க வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கா.வே.பாலகுமாரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

பரிஸ் நகரத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற நினைவெழுச்சி நாள் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய அவர், சமாதான காலம் என்பது உலகிலுள்ள எல்லா விடுதலை இயக்கங்களுக்கும் சோதனைக் காலமாக இருந்ததென்றும், அந்தச் சோதனைக் காலத்தைக்கூட சாதனைக்காலமாக மாற்றியவர்கள் நாங்களே என்றும் தெரிவித்தார்.

எமது தேசியத் தலைவரின் மதிநுட்பத்தைப் பார்த்து இன்று உலகமே வியந்து நிற்கின்றதென்றும், பேசி வெல்வதற்கும்,



பேசாமல் வெல்வதற்கும் அவர் தயாராக நிற்பதைப் பார்த்து,

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சிற்கு ஐ.தே.க. ஆதரவளிக்குமென கூறியும் சனாதிபதி மௌனமாக இருப்பது கவலைக்குரியது

### - எதிர்க் கட்சித் தலைவர் ரணில்

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவு வழங்குவதற்கு வரலாற்றில் முதற்தடைவையாக எதிர்கட்சியில் பிரதான கட்சியான ஐ.தே.கட்சி முன்வந்துள்ள வேளையில் சனாதிபதி இது குறித்து மௌனமாக இருப்பது கவலைக்குரிய விடயமென எதிர்கட்சித் தலைவர் ரணில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று இடம் பெற்ற ஐ.தே. கட்சியின் பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வட்டமடு காணிப் பிரச்சினைக்கு தற்காலிகமான தீர்வு

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பிரதேசத்திலுள்ள வட்டமடு காணி தொடர்பான பிரச்சினைக்கு நேற்று இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு முன்னிலையில் மாவட்ட அரசாங்க அதிபரினால் கூட்டப்பட்ட விசேட கூட்டத்தில் தற்காலிக தீர்வொன்று காணப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் அம்பாறை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் குயிலின்பன், மாவட்ட நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் முரளி, துணைப்பொறுப்பாளர்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சு.கட்சிக்கு புதிய செயலராக மேவின் சில்வா நியமனம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலராக மேவின் சில்வா நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது இவர் சனாதிபதிக்கு மிகவும் நெருக்கமானவர் என்ற அடிப்படையிலேயே இந்த நியமனம் இடம்பெறவுள்ளது இந்தப் பதவியில் தற்சமயம் மைத்திரிபால சிறிசேன இருந்து வருகிறார் எனினும் கட்சியின் செயற்பாடுகள் மந்த கதியில் இயங்கி வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதை அடுத்தே இந்த மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளது.

## கருணாவிற்கு எதிராக மட்டக்களப்பில் சுவரொட்டிகள்

(மட்டக்களப்பு)

மடக்களப்பில் கருணாவுக்கு எதிரான சுவரொட்டிகள் நகர வீதிகளில் ஒட்டப்பட்டுள்ளன. கடந்த சனிக்கிழமை அதிகாலையளவில் இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. தாண்டவெளி,கோட்டைமுனை, அரசடித் தீவு மற்றும் புளியந்தீவு ஆகிய இடங்களிலேயே இவ்வாறான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன..



## புதுமணத் தம்பதியரை ஏற்றிச் சென்ற ஹையஸ்வாகனம் விபத்தில் சிக்கியது

(அலுவலக செய்தியாளர்)

திருமணத் தம்பதிகள் பயணித்துக் கொண்டிருந்த கையஸ் வாகனம் வெலிக்கண்டல் பாலத்திற்கருகில் எதிரே வந்து கொண்டிருந்த எல்வ் ரக வாகனத்துடன் மோதியதில் திருமணத்தம்பதிகள் காயம் எதுவுமின்றித் தப்பினர். மணமகன், மணமகள் ஆகியோரின் தாய், தந்தையர் உட்பட ஐவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று நண்பகல் 12.00 மணிக்கு பரந்தன் புதுக்குடியிருப்பு வீதியில் வெலிக்கண்டல் பாலத்துக்கு அருகில் உள்ள வீதி வளைவில் கிளிநொச்சியில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கி திருமணத் தம்பதிகளை ஏற்றிச் சென்று கொண்டிருந்த கையஸ் வாகனமும், புதுக்குடியிருப்பில் இருந்து கிளிநொச்சி நோக்கி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வீர வணக்கம்

வன்னிமாவட்டம் மாங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம தவறுதலான வெடிவிபத்தின் போது தமிழீழ தேசியத் துணைப் படை வீரர் ஒருவர் சாவடைந்துள்ளார். வீரவேங்கை: ஜெயந்தினி (சந்திரன்- ஜெயந்தினி, பழம்பாசி நெடுங்கேணி - முல்லை) என்ற தேசியதுணைப்படை வீரரே சாவடைந்தவராகும்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## வரிவிளம்பரம்

### துவிச்சக்கர வண்டி மாறிவிட்டது

வட்டக்கச்சி பகுதியில் லுமாலா இல. 5721253இலக்கம் உடைய துவிச்சக்கரவண்டி ஒன்று 14.10.2004 அன்று இராமநாதபுரம் கிராம அலுவலகத்தில் மாறி விட்டது. இதற்குப் பதிலாக லுமாலா இல.57212734 எனும் துவிச்சக்கரவண்டி முன்னைய துவிச்சக்கரவண்டி உரிமையாளர் பொன்னையா என்பவரிடம் மாறுப்பட்டுள்ளது. எனவே தயவு செய்து மாறி துவிச்சக்கர வண்டியை எடுத்தவர்கள் இராம நாதபுரம் கிராம சேவையாளர் இல்லத்தில் ஒப்படைக்கும் வண்ணம் பொன்னையா அவர் கள் வேண்டியுள்ளார். (5188)

### தவறிவிட்டது

சுதந்திரபுரத்தைச் சேர்ந்த இராமையா சங்கீதா ஆகிய இவரின் அடையாள அட்டை உடையார்கட்டுக்கும், விசுவமடு விற்கும் இடையில் தவறவிடப்பட் டுள்ளது. இதைக் கண்டெடுத்தவர் கள் றெட்பான செல்வத்தாய் பல் பொருள் வாணிபத்தில் கொடுக்கு மாறு கேட்டுக்கொள்கின்றேன். கொடுப் போருக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (4698)

### உந்துருளி திருட்டு

வவுனியா வாடி வீட்டில் கடந்த சனிக்கிழமை இரவு உந்துருளி ஒன்று திருடப்பட்டுள்ளது. வாடி வீட்டிற்கு வந்த ஒருவர் அங்கு உந்துருளியை நிறுத்தி விட்டு உள்ளே சென்று மதுபானம் அருந் திக் கொண்டிருக்கும் போதே உந்துருளி திருடப்பட்டுள்ளது. இதுதொடர்பாக உரிமையாளரால் வவுனியா பொலிசில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)

### தவறிவிட்டது

செல்வன் இராசேந்திரம் சாந்தரூபன் என்பவரது தேசிய அடையாள அட்டை யும், நிரந்தர பயண அனுமதி அட்டையும் மற்றும் மணிப்பேர்ஸ் என்பன முறிகண்டிக கும் கிளிநொச்சிக்கும் இடையில் 17.10.2004 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர் கள் தயவுசெய்து கிளிநொச்சி சேரன் நடுவப்பணிமனையில் ஒப்படைத்து தவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
தகவல்:- இ. சாந்தரூபன் (5190)

### காணி தேவை

கிளிநொச்சி மாவட்டத்தில் காணி தேவைப்படுகின்றது. காணி அமைவிடம், காணி இல,காணி அளவு, விலை போன்ற விரிவான விபரங் களுடன் முதலில் கடிதம் மூலம தொடர்புகொள்ளவும். கடிதங் களை யாழ்சாலை, ஈழநாடு, கிளிநொச்சி என்ற விசலாசத் திற்கு அனுப்பிவைக்கவும். (5191)


**16.10.2004 -11-11-2004 வரை**
**தீபாவளி மலிவு விற்பனை**
**நீங்கள் வாங்கும் சகல பொருட்களுக்கும்**
**விசேட கழிவு**
**உடனே விஜயம் செய்யுங்கள்**
**லைடன் புடைவை நிலையம்**
இல.410, ஆஸ்பத்திரி வீதி
(பஸ்நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.
222 2381 (சி-10273)


## சாவு அறிவித்தல்

சோளங்கன் கரணவாய் மேற்கு கரவெட்டியைச் சேர்ந்த பொன்னையா மார்க்கண்டு 17.10.2004 அன்று சுவிசில் காலமானார். இவர் பாமினியின் அன்புக் கணவரும், ஜெகன் (வவுனியா), ஜெயந்தி (இயலி), ரகுநாதன், யாதவன் இவர்களின் அன்புத் தந்தையும், வேணியின் மாமனாருமாவார். இவரின் இறுதிக் கிரியைகள் 22.10.2004இல் சுவிசில் நடைபெறும் என்பதை உறவினர் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

(5195)
தகவல்:-
இயலி (போராளி)


**கொல்சிம் சீமெந்து (புத்தளம் சீமெந்துக் கூட்டுத்தாபனம்)**
**அறிமுக விழாவும் சந்தைப்படுத்தல் கருத்தமர்வும்**




இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்
காலம்: 2004.10.19 (இன்று)
நேரம்: பி.ப. 1.00 மணி

**நிகழ்வுகள்**
சுடரேற்றல்
அகவணக்கம்
தலைமையுரை
அறிமுகவுரை
திரு. இரத்தினராஜா விஜயகுமார்
(விற்பனை அதிகாரி கொல்சிம் சீமெந்து)
சிறப்புரை
முதன்மைவிருந்தினர் உரை
திரு. ஜெனில்ஸ் தயானந்தன்
(பொறியியலாளர் கொல்சிம் சீமெந்து நிறுவனம்)
நன்றியுரை

இலங்கைத் தயாரிப்பில் உறுதிக்கு உரிமை கொண்டாடும் ஒரே நிறுவனம்
கொல்சிம் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்

விழாவில் கலந்து மகிழ்வில்திளைப்பீர்!
கருத்துக்கள் பெற்று கலக்கம் தீர்ப்பீர்!
**உறுதியின் உண்மையை ஊரறிய வாருங்கள்**

உருக்குலைந்த வாழ்வை மீட்க!
உறுதியான கட்டடங்கள் தேவை.
உறுதிமிகு கட்டடத்திற்கு
வலுவுள்ள அத்திவாரம்
**கொல்சிம் சீமெந்து**

விழா ஏற்பாட்டாளர்கள்: யாழ்முகவர்களான
**முருகன் களஞ்சியம்**
இல: 167, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P-2226968
(சி-10493)




சென்.அந்தனீஸ் நிறுவனத்தின் நிர்வாகப்பணிப்பாளர் திரு.ராஜசீலன் ஞானம் அவர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்படுகின்றார்.



சென்.அந்தனீஸ் நிறுவனத்தின் நிர்வாகப்பணிப்பாளர் திரு.ராஜசீலன் ஞானம் அவர்கள் மங்களவிளக்கேற்றுகின்றார்.



புதிய உமாசாகி காட்சியறையினை திறந்துவைக்கும் யப்பான் மிற்சுயி நிறுவனத்தின் நிர்வாகப்பணிப்பாளர் திரு. ஜனுகிகார அவர்கள்.



புதிய உமாசாகி காட்சியறையில் முதலாவது விற்பனையினை ஆரம்பித்து வைக்கும் திரு. ராஜசீலன் ஞானம் அவர்கள்








உமாசாகி உந்துருளிகளுக்கான வடபகுதி முகவராண்மை பெற்ற
**சிவகுரு கட்டடப்பொருள்**
UMAZAKI உந்துருளி வாணிபத்தினரின்
Free Service WARRANTY 10,000km or 1year
**நவீன உமாசாகி காட்சியறை**
**நேற்று கோலாகலமாக திறந்துவைக்கப்பட்டது.**
உங்களுக்கான தெரிவுகளுக்கு
எமது குளிரூட்டப்பட்ட காட்சியறைக்கு வாருங்கள்
**சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்**
இல. 496,496/1, நாயகி கட்டடம், யாழ்சாலை, பரந்தன், கிளிநொச்சி.
(சி-10494)

# ஈராக்கில் ஐ.நா பணியாளரின் பாதுகாப்பிற்கு துருப்புக்களை அனுப்ப அவுஸ்திரேலியா மறுப்பு

(பாக்தாத்)

**ஈராக்கிலுள்ள ஐ.நா பணியாளர்களைப் பாதுகாப்பதற்காக மேலதிக துருப்புக்களை அனுப்பும்படி விடுக்கப்பட்ட கோரிக்கையினை அவுஸ்தி ரேலியா நிராகரித்துள்ளது.**

ஐ.நா தனது பணியாளர்களின் பாதுகாப்பிற்காக பன்னாட்டுப் பாதுகாப்புப்படையொன்றை உருவாக்க அரும்பாடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது கடந்த வருடம் யூலை மாதம் ஈராக்கின் பாக்தாத் பகுதியில் அமைந்திருந்த ஐ.நா அலுவலகத்தில் குண்டொன்று வெடித்ததில் ஐ.நா சிறப்புப் பிரதிநிதி உட்பட 22 பேர் கொல்லப்பட்டதிலிருந்து தெரிந்ததே .ஐ.நா தனது ஊழியர்களின் பாதுகாப்புக் குறித்துக் கவலைப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஈராக்கில் தீவிரவாதிகளுடன் போரிட்டுவரும் அமெரிக் கத்தலைமையிலான கூட்டுப்படைகளில் அவுஸ்திரேலியப் படையினரும் அங்கம் வகிக்கின்றமை தெரிந்ததே.



ஈராக்கில் அமெரிக்கக் கூட்டுப்படைகள் நடத்தும் யுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்துவோர் ஆர்ப்பாட்டத்தில் எடுத்துச்சென்ற உருவச்சிலைகள்

# தெற்கு ஈராக்கிலுள்ள தமது துருப்பினரை பாக்தாத்திற்கு அனுப்ப பிரிட்டன் பின்னடிப்பு

(பாக்தாத்)

தெற்கு ஈராக்கில் இருக்கின்ற பிரிட்டிஷ் துருப்பினரில் ஒரு பகுதியினரைப் பாக்தாத்திற்கு அருகிலான இடங்களுக்கு அனுப்பவேண்டும் என்கின்ற அமெரிக்க வேண்டுகோளை பிரிட்டிஷ் அரசு பரிசீலித்து வருவதாக அதன் பாதுகாப்புத் துறை அமைச்சர் தெரிவித்து வருவதாக அதன் பாதுகாப்புத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பொதுவாக மிகவும் ஆபத்தான இடங்களென இவ் இடங்கள் கருதப்படுகின்றன. இவ் இடங்களும் பிரிட்டிஷ் துருப்பினர் சென்றால் பிற இடங்களில் இருக்கும் தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கப்படையினர் நடவடிக்கை எடுக்க இடம் கிடைக்கும் என அமெரிக்கா கூறுகிறது. ஆனால் பாக்தாத்திலும் மோதல் உக்கிரமாக நடந்துவருகின்ற பலூஜா நகரிற்குள்ளும் பிரிட்டிஷ் துருப்பினரை அனுப்புவதாக இந்த ஆலோசனை அமையாதென பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.



தெற்கு ஈராக்கில் நிலைகொண்டுள்ள பிரிட்டன் துருப்புக்கள் அணிவகுப்பின் போது



கொலம்பியாவின் போகோட்டாவில் உள்ள வலிநிவாரணி ஊசிமருந்து (Cocaine) உற்பத்திச்சாலை ஊழியர்களின் பிள்ளைகளைச் சுற்றிவளைத்திருக்கும் அந்நாட்டு இராணுவம். (இம்மருந்து அரசால் தடைசெய்யப்பட்டது.)

# டார்பன் பிராந்திய மோதலுக்கு முடிவுகாண சூடானிய அரசு இணக்கம்



சூடானின் டார்பர் பிராந்தியத்தில் சுற்றுலா மேற்கொள்ளும் நீதிக்கும், சமத்துவத்துக்குமான குழுவினர்.

(டார்பன்)

சூடானின் டார்பன் பிரந்தியத்தில் சுமார் 15 இலட்சம் மக்களை இடம் பெறச் செய்துள்ள மோதல்களுக்கு முடிவுகாண சூடான் அரசாங்கம் இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

லிபியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆபிரிக்க நாடுகளின் தலைவர்களுடனான பேச்சு வார்த்தையின் போதே சூடானின் அரச பிரதிநிதி தனது இணக்கப் பாட்டினைத் தெரிவித்துள்ளார்.

எனினும் டார்பன் பிராந்தியத்தில் இடம் பெற்று வரும் பிரச்சி னைகளுக்குத் தீர்வுகாண சூடானுக்கு பல்வேறு உதவிகளை வழங்க வேண்டு மென்று எகிப்திய சனாதிபதி செயலகப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

சூடானுக்கு எதிராகத் தடைகள் விதிக்கப் போவதாக அச்சுறுத்துவதிலும் பார்க்க இத்தகைய உதவிகளை வழங்குவது சாலச்சிறந்த தென்றும். சூடானின் மேற்குப்பகுதியில் இடம் பெற்றுவரும் வன்முறைகளை முடிவிற்குக் கொண்டு வரும் பொருட்டு சூடான் நாட்டு அரசாங்கம் தனக்கு முன்னேயுள்ள கடமைகளை நிறைவேற்ற முழு அளவிலான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வீட்டின் மீது மோதியது சீன செயற்கைக் கோள்

(பீஜிங்)

பூமிக்குத்திரும்பிய சீன செயற்கைக்கோள் நான்கு அடுக்குக் கட்டடத்தின் மீது மோதிச் சிதைந்தது. அதிஷ்டவசமாக இந்த விபத்தில் யாரும் காயமடையவில்லை. சீன விண்வெளி ஆராட்சி மையம் செயற்கைக் கோளை விண்வெளியில் செலுத்தி ஆராட்சி முடிவுக்குப் பிறகு. அந்தச் செயற் கைக் கோள்கள் மீண்டும் பூமிக்குத் திரும்பச்செய்து வருகிறது. இது வரை 19 செயற்கைக்கோள்கள் புவி வட்டப் பாதையைச் சுற்றிவிட்டு பூமிக்குத் திரும்பியுள்ளன. புவி அமைப்புக் குறித்து ஆய்வு செய்யும செயற்கைக் கோளைச் சீனா கடந்த ஓகஸ்ட்மாதம் விண்ணில் செலுத்தியது. இந்த 20ஆவது செயற்கைக் கோள் கடந்த 15ஆம் திகதி பத்திரமாகப் பூமிக்குத்திரும்பியது. ஆனால் துரதிஷ்டவசமாக சிச்சுவான் மாகாணத்தில் பெங்லாய்ப் பகுதியில் நான்கு அடுக்குமாடிக் குடியிருப்பின் மீது இந்தச்செயற்கைக் கோள் மோதியது. இதனால் அந்தக் கட்டடமும் செயற்கைக் கோளும் சேதமடைந்தன. இருப்பினும் இந்த விபத்தில் யாரும் காயமடையவில்லை எனச் சீன அரசு தெரிவித்துள்ளது.

# பெலாரஸ் சனாதிபதி அலெக்ஸ்சாண்டர் 3ஆவது முறையும் தேர்தலில் போட்டியிட அனுமதி

பெலாரஸில் நேற்று முன்தினம் நடைபெற்ற சர்வசன வாக்கெடுப்பில் சனாதிபதி அலெக்ஸ்சாண்டர் லூக்கோசிங்கோ அமோக வெற்றி பெற்றுள்ளார்.

அரசியல் யாப்பிற்கமைய அலெக்ஸ்சாண்டர் லூக்கோசிங்கோவை தொடர்ந்து பதவியில் வைத்திருப்பதா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்கும் பொருட்டே இந்த சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

சனநாயக வழிமுறைகளுக்கு விரோதமாகச் செயற்பட்டார் என்று குற்றம் சாட்டப்பட்ட இவர் தொடர்ந்தும் பதவியிலிருக்க 50 சதவீத வாக்காளர்களின் ஆதரவைப் பெற வேண்டும்மென்று அந்நாட்டின் அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனடிப்படையில் நடத்தப்பட்ட சர்வசன வாக்கெடுப்பில் அலெக்சாண்டர் லூக்கோசிங்கோ இருமுறைகளுக்கு மேல் பதவி வகிக்க முடியுமா என்பதைத் தீர்மானிக்கும் வகையில் இவ்வாக்கெடுப்பு அமைந்திருந்தது எனவும் தெரிவிக்கப்படும் அதே வேளை பெலாரஸின் மத்திய தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் அறிவித்துள்ளார். உத்தியோக பூர்வ முடிவின்படி 77.3 வீதம் சனாதிபதி லுக்கோ சிங்கோவிற்குக் கிடைத்துள்ளது. இந்த முடிவிற்கமைய 2006 ஆம் ஆண்டு நடைபெறவுள்ளது.

சனாதிபதித் தேர்தலிலும் போட்டியிடுவதற்கு அலைக்ஸ்சாண்டர் லுக்கோசிங்கோவிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தீ விபத்து

வெனிசுவெலாவின் தலைநகரில் 54 மாடியினைக் கொண்ட கட்டடமொன்றின் 34 ஆவது மாடியில் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு திடீரென தீப்பிடித்துக் கொண்டது. இதனையடுத்து தீயானது ஏனைய மாடிகளுக்கும் பரவிய வேளை தீயணைப்புப்படையினர் உடனடியாக உலங்குவானூர்தியில் உதவியுடன் தீயை அணைத்தாகப் பாதுகாப்பமைச்சர் ஜெனரல் கால்மியா கால்னோரா தெரிவித்துள்ளார்.

# தொழிலாளரின் கைரேகையைப் பதிவு செய்ய ஐக்கிய அரபு எமிரேட் அரசு நடவடிக்கை

ஐக்கிய அரபு எமிரேட்டில் தொழிலாளர்கள் ஒப்பந்தச் சட்டத்தில் முக்கியமானதொரு மாற்றமாக தொழிலாளர்களின் கைரேகைகள் பதிவு செய்யப்படவேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனை அறிவித்துள்ள ஐக்கிய எமிரேட்டின் தொழிலாளர் நல இணையமைச்சர் அகமத் கசூர் இதன் மூலம் தொழிலாளர்கள் தமது தொழில் ஒப்பந்தங்களில் போலிக் கையெழுத்துக்களைப் போடுவது தவிர்க்கப்படுகிறது. இந்தப் புதிய நடவடிக்கையின் கீழ் வெளிநாட்டுப் பணியாளர்கள் அனைவரும் ஐக்கிய அரபு எமிரேட்டில் சென்று இறங்கிய பின்னர் அவர்களது. கைரேகைகள் பதிவு செய்யப்பட்டு நிறுவனங்கள் அளித்துள்ள பணி ஒப்பந்தங்களிலுள்ள கைரேகைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படும் .

இதுமட்டுமன்றிப் பணியாளர்களின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும், ஐக்கிய அரபு எமிரேட் அரசிற்கு உதவும் என்றும் கூறியுள்ளார்.

# பல்வைத்தியரின் பொறுப்பில் இயங்கும் அக்கராயன் சுற்றயல் கூறு வைத்தியசாலை!

## அடிப்படை வசதிகளை நிவர்த்திசெய்ய வேண்டுகை

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி அக்கராயன் சுற்றயல் கூறு வைத்தியசாலையில் வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் பற்றாக்குறையுடன் இயங்கி வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது.**

மேற்படி வைத்தியசாலையில் எம்.பி.பி.எஸ். தரத்திலான வைத்திய அதிகாரி இல்லாத நிலையில் பல்வைத்திய நிபுணர் ஒருவரே இவ் வைத்தியசாலையில் பொறுப்பு வைத்திய அதிகாரியாக பணி புரிந்துவருவதனை காணமுடிகின்றது.

மற்றும் இவ் வைத்திய சாலையில் வெளிநோயாளர் பிரிவில் ஒரேயொரு ஆர்.எம்.ஓ. தரத்திலான பிரதேச வைத்தியர் ஒருவரே கடமை புரிந்துவருகின்றார்.

பிராந்திய வைத்திய அதிகாரி விடுப்பில் செல்லநேரும் பட்சத்தில் வெளிநோயாளர் பிரிவு மற்றும் விடுதி நோயாளர்களுக்கான சிகிச்சையினை வைத்தியசாலை பொறுப்பதிகாரியே கவனிக்க வேண்டிய நிலையில் இவ்வைத்தியசாலை இயங்கிவருவது சுட்டிக்காட்டப் படவேண்டிய தொன்றாகும்.

மற்றும் இவ்வைத்தியசாலையில சிற்றூழியர் பற்றாக்குறை நிலவி வருவதன் காரணமாக வைத்திய சாலையில் தற்போது பணிபுரியும் ஊழியர்களே மேலதிக நேரம் கடமையில் ஈடுபட்டுவருவதாகவும் தெரியவந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையிலிருந்து 25 கிலோமீற்றருக்கு அப்பால் போக்குவரத்து மற்றும் வசதிகள் குறைந்த பகுதியில் இயங்கிவரும் மேற்படி வைத்தியசாலையில் தற்போதைய நிலையில் கூட தொலைத்தொடர்பு வசதி இல்லாத நிலையில் இயங்கி வருவதாகவும் தொலைத்தொடர்பு ஏற்படுத்தப்படும் பட்சத்தில் நோயாளர்களுக்கான அவசரசிகிச்சைகள் மற்றும் அத்தியாவசிய மருத்துவ சேவைகள் குறித்து மாவட்ட வைத்தியசாலையுடன் தொடர்பு கொண்டு சிகிச்சைகளை இலகுபடுத்த முடியுமென வைத்திய சாலை வட்டாரத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி வைத்தியசாலையில் கணிசமான நோயாளர்கள் வைத்தியசாலை விடுதியில் தங்கி சிகிச்சைபெற்றுவருவதுடன் தினமும் 150இற்கு மேற்பட்ட நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதன் காரணமாக வைத்தியர்கள் முதல் ஊழியர்கள் வரை பாரிய சிரமங்களுக்கு மத்தியில் இவ் வைத்தியசாலையில் பணிபுரிந்து வருகின்ற நிலைக்கு உள்ளாக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## வேகக்கட்டுப்பாட்டுக் குறியீட்டை இடுமாறு மக்கள் கோரிக்கை

(பூநகரி)

கிளிநொச்சி வீதி, நாக தேவன் துறை வீதி, மன்னார் வீதி ஆகிய மூன்று வீதிகளின் ஊடாக வாடியடி ஆலடியை நோக்கி வாகனங்கள வரும்போது விபத்து ஏற்படஅதிக சந்தர்ப்பம் இருக்கின்றது. எனவே இம்மூன்று வீதிகளிற்கும் வேகக் கட்டுப்பாட்டுச் சமிக்ஞைக் குறிகளைப் போடவேண்டும் என மக்கள் கோருகின்றனர். (34)

-வைத்தியசாலையில் மரணமான-

## வயோதிபப் பெண்ணின் சடலத்தை பொறுப்பேற்கக் கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளி.மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட வயோதிபப் பெண் ஒருவர் மரணமான நிலையில் அவரது சடலத்தை எவரும் பொறுப்பேற்காத நிலையில் இருக்கிறது.

கடந்த ஒன்பதாம் திகதி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த வயோதிபப் பெண் தனது பெயர் பழனியம்மா எனவும் தனது வயது 60 எனவும் தனது முகவரி சி.குமார் 725, வட்டக்கச்சி எனவும் பதிவு செய்திருந்தார்.இவர் வைத்திய சாலையில் கடந்த 15 ஆம் திகதி மரணமாகிய நிலையில்,இதுவரை அவரின் உடலை எவரும் பொறுப்பேற்காத நிலையில் வைத்திய சாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. எனவே இவரது உறவினர்கள் யாராவது இவரது உடலைப் பொறுப்பேற்குமாறு வேண்டப்படுகின்றது. (லோ,தீ)

## சிரமதானம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செட்டிகுளம் பிரதேச இணைப்பாளரின் ஒழுங்குபடுத்தலின் கீழ் வீரபுர அம்மன் கோவில் பாதை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. அப்பகுதி மக்களை அழைத்து கலந்துரையாடி கோவில் வளவுக்கான சுற்று மதில் அமைத்துக் கொடுப்பதற்கான சலக ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்பட்டது. இதன்போது 40இற்கும் மேற்பட்ட மக்கள் பங்களிப்புச் செய்ததுடன் ரூபா ஒரு இலட்சம் பெறுமதியான வேலை ஒழுங்குபடுத்திக் கொடுக்கப்பட்டது. என்பது குறிப்பிடத்தக்கது.

# சுயநிர்ணய உரிமையை போராடிப் பெறும் வலிமை மிக்க பலத்துடன் இருக்கின்றோம்

**- பாராளுமன்ற உறுப்பினர் த.கனகசபை**

(மட்டக்களப்பு)

வடக்குக் கிழக்கு தமிழர் தாயக மண்ணில் இரண்டு தசாப்த காலங்களுக்கு மேலாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக எமது தமிழ் மாணவர்களின் கல்வி நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

எமது மக்களின் ஒரே சொத்தான கல்வியை மீளவும் கட்டி எழுப்ப வேண்டுமாயின் பாடசாலைகளை மட்டும் நம்பியிருக்காது, சேம நல அமைப்புக்களும் கல்வி மேம்பாட்டுக்காக அயராது உழைக்க முன்வர வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கனகசபை கூறினார். மட்டக்களப்பு மகிழூர் சமூக உயர்கல்வி அபிவிருத்தி ஒன்றியம் நடாத்திய மகிழூர் பெரும் பிரதேச பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் மகிழூர் சரஸ்வதி வித்தியாலய மண்டபத்தில் மகிழூர் சமூக உயர்கல்வி அபிவிருத்தி ஒன்றியத்தலைவர் ரி.புவனேசராசா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியான பாராளுமன்ற உறுப்பினர் கனகசபை தொடர்ந்து உரையாற்றுகையில், தமிழ் மக்கள் தமது சுய நிர்ணய உரிமையை போராடியே பெறவேண்டும் என்று அரசாங்கம் நினைத்தால், நாம் போராடிப் பெறக் கூடிய வலிமை மிக்க படைப் பலத்துடன் இருக்கின்றோம் இதனை அரசு நன்கு உணர வேண்டும். எமது மாணவ சமூகத்திற்கு அன்றும், இன்றும் பல அநீதிகள் இழைக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. அன்று தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களின் கல்வியை ஏப்பமிட்ட அரசு இன்று பௌதீக வளப் பகிர்விலும், ஏனைய வளங்களை வடக்கு, கிழக்கிற்கு வழங்குவதிலும் பின்னடைவான போக்கைக் கையாண்டு வருகிறது. எனவே, நாம் இவற்றில் இருந்து மீட்சி பெற்று, தன்மானத்துடன் வாழ வேண்டுமானால் புலிகள் கோரி நிற்கும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை எமது கைகளுக்கு வந்தடைய வேண்டும். இதன் பின்னர் அரசும், தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான புலிகளும் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட வேண்டும் என்றார். நிகழ்வில் பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. சாந்தி பவளகாந்தன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

# உணவு விவசாய நிறுவன உதவியுடன் விவசாயிகளுக்கு உள்ளீடுகள் வழங்கல்

உணவு விவசாய நிறுவனத்தின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் கடந்த 11ஆம், 12 ஆம் திகதிகளில் ஊற்றுப்புலம் முன்பள்ளியில் விவசாயிகளுக்கான உள்ளீடுகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் 200 பயனாளிகளுக்கும் உள்ளீடுகளாகத் தலா 05 கிலோ உழுந்து, 05 கிலோ கௌப்பி, 25 கிலோ யூறியா, 40 கிலோ ரீ.எஸ்.பி, 25 கிலோ எம்.ஓ.பி வழங்கப்பட்டன. மொத்தம் ஒரு பயனாளிக்கு 2750 ரூபா பெறுமதியான உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் உணவு, விவசாய நிறுவன மாவட்ட இணைப்பாளர், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமாவட்டச் செயலர், அக்கராயன் பிரதேச இணைப்பாளர், ஊரகவளர்ச்சிப் பொறுப்பாளர், ஊரகவளர்ச்சிக் குழுப் பிரதிநிதிகள், கமக்காரர் அமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.அத்துடன் கடந்த 13 ஆம், 14ஆம் திகதிகளில் சாந்தபுரம் பாடசாலையில் மேற்படி திட்டத்தின் கீழ் 225 பயனாளிகளுக்கு தலா 2750 ரூபா பெறுமதியான உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

# பாடசாலை அபிவிருத்தியில் அக்கறை செலுத்துக!

விசுவமடு மகாவித்தியாலயம் நிரந்தர அதிபர் இன்றி இயங்கிவதுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினதும் பழைய மாணவர் சங்கத்தினதும் செயற்பாடுகளும் சீரற்ற நிலையில் காணப்படுகின்றது. இதேவேளை துறைசார் திணைக்களங்களும் இது தொடர்பாக கவனமெடுக்க



திறந்த வெளி அரங்கின் நிலை

வில்லை என அப்பாடசாலையின் பதில் அதிபர் திருமதி. இராமச்சந்திரன் கவலை தெரிவிக்கிறார்.

இது பற்றி அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் பழைய மாணவர் சங்கத்தினர் திறந்த வெளி அரங்கொன்றை அமைக்க முன்வந்து, வேலைத்திட்டங்களை ஆரம்பித்து அதனை இடை நிறுத்தி ஒன்றரை வருடமாகியும் மீண்டும் வேலைகளை ஆரம்பிக்கவில்லை.அத்தோடு பாடசாலையின் வளர்ச்சியிலும் அதனது செயற்பாடுகளிலும் அதிக அக்கறையுடன் செயற்படவேண்டிய இவர்கள் எதுவித ஈடுபாடு மற்று ஆரம்பித்த செயற்பாட்டைக் கூட இடையில் நிறுத்திவிட்டு அதனைத் தொடர்வதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ளாதுள்ளனர். இவர்களது இச்செயற்பாடானது பாடசாலையின் அபிவிருத்தியையும், அதன் கல்வி சார் செயற்பாடுகளையும் பாதிப்பதாகவே அமைகின்றது எனக் குறிப்பிட்ட அவர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரின் ஒத்துழைப்பும் போதிய அளவு கிடைப்பதில்லை. கடந்த வருடம் புதிய அதிபரை நியமிப்பதிலும் அது சார்ந்த செயற்பாடுகளிலும் தீவிரமாகச் செயற்பட்ட இவர்கள் அதனைத் தொடர்ந்து நடைபெறும் பாடசாலைக் கல்வி சார் செயற்பாடுகளுக்கோ ஏனைய புறச் செயற்பாடுகளுக்கோ எந்த விதமான பங்களிப்பையும் மேற்கொள்ளாதுள்ள இதே வேளை ஒன்று கூடல்களை ஒழுங்குபடுத்தியபோதும் அதற்கும் சமுகமளிப்பதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் இப்பாடசாலையானது க.பொ.உயர்தர வகுப்புகளில் கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம், கலைப்பிரிவு எனச் சகல பிரிவுகளையும் உள்ளடக்கிய கல்லூரியின் தரத்தை எட்டியுள்ள இதேவேளை இப்பாடசாலைக்கு நிரந்தரமாக ஓர் அதிபரை நியமித்து மாணவர்களின் கல்விக்கு ஊக்கமளிப்பதில் துறைசார் திணைக்களங்கள் தொடர்ந்தும் அசமந்தப் போக்கையே கையாளுகின்றன. இப் பாடசாலை கடந்த ஒரு மாதகாலத்திற்கு மேலாக அதிபர் இல்லாத நிலையிலேயே இயங்கிவருகிறது. இது போன்றே கடந்த காலத்திலும் அதிபரை நியமிப்பதில் ஏற்பட்ட சிக்கல்களால் மாணவர்கள் வலயக்கல்விப் பணிமனைவரை சென்று கற்றல் புறக்கணிப்பில் ஈடுபட்ட பின்பே ஓர் அதிபர் நியமிக்கப்பட்டார். ஆனால் இப்போது மற்றுமொரு அதிபரை நியமிக்காத நிலையில் இங்கு கடமையில் இருந்த அதிபருக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இச் செயற்பாடானது இப் பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளைப் பெரிதும் பாதிப்பதாகவே அமைந்துள்ளது.

அத்தோடு இங்கு விஞ்ஞான கூடம் ஒன்றை அமைப்பதற்கான கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருட காலமாகியும் இன்னமும் கட்டடவேலைகளை முடித்துத்தர சம்பந்தப்பட்டவர்கள் முன்வராத நிலையிலும் 18 இலட்சம் ரூபா செலவில் நூல் நிலையம் அமைக்க ஆரம்பித்து ஒன்றரை வருடங்கள் ஆகியும் வேலைகள் முடிக்கப்படாத நிலையிலும் உள்ளது. அத்தோடு தரம் 01தொடக்கம் தரம்



வேலைகள் முடிவுறாத நூல் நிலையம்

09 வரையான மாணவர்கள் தற்காலிக கொட்டகைகளிலேயே தளபாடப் பற்றாக்குறையுடன், நிலத்திலும் அமர்ந்து கற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றைத் துறைசார் திணைக்கள அதிகாரிகள் கவனத்தில் எடுத்துச் செயற்படுவதோடு இப் பாடசாலைக்கு விரைவாக ஓர் அதிபரையும் நியமனம் செய்யவேண்டுமென்பதே எமது வேண்டுகோளாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ச,லோ)

# வெளிநாடுகளிலுள்ள உறவுகள் போராட்டத்திற்கு செய்யும் பணி போற்றப்பட வேண்டியது

### விடுதலைப்புலிகளின் கலைபண்பாட்டு கழகப் பொறுப்பாளர்

(யாழ்ப்பாணம்)



**போர் நடக்கின்ற காலத்தில் போர் நடக்கின்ற இடத்தில் இருப்பது மட்டும் தகுதி இல்லை. இங்கு இருந்து கொண்டு இம்மண்ணின் வளர்ச் சிக்காக எந்தவிதமான பங்களிப்பையும் ஆற் றாது இருப்பதைவிட இடம் பெயர்ந்து வெளி நாடுகளில் உள்ள எமது உறவுகள் செய்யும் பணி போற்றப்படவேண்டியது என்கிறார் கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை.**

கடந்த சனிக்கிழமை கனடா சிலம்பம் அமைப்பினர் உருவாக் கிய அரிமா அழகனின் “பொங்கு தமிழே” பாடல் இசைத்தட்டு நல் லூர் நாவலர் கலாசார மண்ட பத்தில் வெளியிட்டு வைக்கப் பட்டது இன்நிகழ்வில் கலந்து கொண்டு வெளியீட்டு உரை நிகழ்த் தியபோதே இவ்வாறு அவர் குறிப் பிட்டார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது.

எமது நாட்டில் இருந்து போர் நெருக்கடிகாரணமாக வெளிநாடு களுக்கு சென்ற எமது உறவுகள் தாங்கள் இனி தமது சொந்த இடங் களுக்கு திரும்புவமோ என்று எண்ணி தொய்வடைந்து இருந்த னர். ஆனால் இங்கு நடந்த போராட்டம் இதை மாற்றி அமைத்து பெரும் வெற்றிகளை ஈட்டி அவர்களுக்கு பெரும் உற் சாகத்தை கொடுத்தது, இந்த வெற்றி எமக்கு பெரிதாகத் தெரியவில்லை ஆனால் எமது புலம் பெயர்ந்த உறவுகளுக்குத்தான் இந்த வெற்றியின் பெருமை தெரிகின்றது. ஏனென்றால் நாம் ஊரை மட்டுமே இழந்தோம் ஆனால் அவர்கள் ஊரை இழந்து, உறவுகளை இழந்து, சொத்துக்களை இழந்த வர்கள். அவர்கள் செய்த பணியை ஆத்மரீதியாக நேசிக்கின் றோம். அதை போற்றுகின்றோம். இன்று எமது அரசியல் உயர்மட் டக்குழுவினர் வெளிநாடுகளுக்கு செல்லும் போது விமான நிலை யங்களில் அவர்களை வரவேற்க எமது உறவுகள் பெருந்திரளாக அணிதிரண்டு நின்று வரவேற் பளிப்பது கதிர்காமர் ஐயாவுக்கு பிடிக்கவில்லை. இதனால்தான் அவர் பல்வேறுபட்ட அறிக்கை களை விடுகின்றார் எனக் குறிப்பிட் டார் இந் நிகழ்வில் பொரும் திரளான மக்கள், வல்லுனர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## தென்மராட்சி பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை

### -பொதுமக்கள் முறைப்பாடு

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் அதிகளவான ஆசிரியர்கள், அதிபர்கள் பற்றாக்குறை நிலவிவருவதாக மக்கள் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரியவருகின்றது.

அதிலும் மட்டுவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலை இப்பிரதேசத்தில் ஆசிரியர் பற்றாக்குறை அதிகம் உள்ள பாடசாலையென இனங்காணப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இப்பிரதேசத்தில் அமைந்துள்ள பல பாடசாலைகளில் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறையால் கல்விச்செயற்பாடுகள் ஒரு மந்த நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் கூடிய கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கேட்டுள்ளனர். (28)

## காவலரண் அகற்றல்

கடந்தகால யுத்த அனர்த் தங்களினால் பெரும் அழிவுக்குள் ளான வல்லைப் பால திருத்த வேலைகளிற்காக அப்பகுதியி லிருந்து வந்த முக்கிய காவலர ணொன்றைப் படைத்தரப்பு அகற்றி யுள்ளது.

யாழ். பருத்தித்துறை வீதியி லுள்ள வல்லைப்பாலத்தினில், படையினரால் குடாநாடு கைப்பற் றப்பட்ட காலப்பகுதி முதலான எட்டு வருடங்களாக அமைந் திருந்த இராணுவக் காவலரனே அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது. (27)

## எவரும் ஒப்படைக்கவில்லை

நாட்டில் சட்டவிரோதமான ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் அவைகளை மீண்டும் அரசாங்கத் திடம் ஒப்படைத்தால் அதன் பெறு மதியை வழங்குவதற்கு அரசாங் கம் தீர்மானித்துள்ள போதும் இது வரை எந்த ஒரு ஆயுதங்களும் பொலிஸ் திணைக்களத்தில் ஒப் படைக்கவில்லை எனப்பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

## குண்டுகளை வெடிக்க வைத்து தென்மராட்சியில் படையினர் பயிற்சி

எழுதுமட்டுவாள், கரம்பகம், ஒட்டுவெளி, உசன் பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறிலங்காப் படைகள் இரவு வேளை குண்டு களை வெடிக்க வைத்தும், சுட்டும் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதால் இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் நிம்மதியிழந்து பீதி அடைந்துள்ளனர்.

சிறிலங்காப்படைகள் பாரிய குண்டுகளை வெடிக்க வைத்துப் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபடுவ தால் குழந்தைகளும், முதியவர் களும், மாணவர்களும் இச்சத்தத்தி னால் பெரிதும் பாதிக்கப்படுவ தாகத் தெரியவருகிறது. கடந்த இரண்டு மாதங்களாகச் சிறிலங்காப் படைகள் பயிற்சி என்ற போர் வையில் குண்டுகளை வெடிக்க வைத்து மக்களின் இயல்பு வாழ் வைப் பாதிக்கின்ற சம்பவங்கள் அதிகரித்து வருவதாகத் தெரிய வருகிறது.

இத்தகைய அத்துமீறிய சிறி லங்காப்படைகளின் செயற்பா டுகள், இருப்பிடங்களை இழந்து அகதிகளாய் அடுத்தவர் வீடுக ளில், காணிகளில் வாழும் மக்க ளின் சிறிலங்காப்படைகளின் மீதான அதிருப்தியை அதிகரித்துள் ளது. காயமுற்று கண்ணீருடன் வாழும் தமிழர்களின் உள்ளக் கொதிப்பைப் படையினரின் இத் தகைய ஈனச்செயற்பாடுகள் அதி கரிக்கும் என்பதில் ஐயமில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது. (28)

## சாவகச்சேரி வைத்தியசாலையின் அபிவிருத்திச்சபையை இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

கடந்தகால யுத்த நடவடிக்கையால் இயங்கமுடியாது போயுள்ள சாவகச்சேரி வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையை உடன் இயங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து பாராளுமன்ற உறுப்பினரிடம் இந்த விடயம் பலவேறு தரப்பினரால் வலியுறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், துரித அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கவும், அபிவிருத்திசபை இயங்குவது முக்கியமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் காலம் தாழ்த்தாது இப்பிரதேச வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு அபிவிருத்தி சபையை இயங்கவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (28)

## ஜாதிக ஹெல உறுமய பொதுச் செயலாளரும் இராஜினாமாச் செய்யவுள்ளதாக அறிவிப்பு

பௌத்த பிக்குகளை உள்ளடக்கிய ஜாதிக ஹெல உறுமயவில் தொடரும் உட்பூசல் காரணமாக பொதுச் செயலாளர் வணக்கத்துக்குரிய உடுவே தம்மாலோக்க தேரோவும் அக்கட்சியிலிருந்து எதிர்வரும் புதன்கிழமை இராஜினாமாச் செய்ய தீர்மானித்துள்ளார்.

இந்த தகவலை உடுவே தம்மாலோக்க தேரோ ஊடகங்களுக்கு நேற்று வெளியிட்டுள்ளார்.கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் மட்டுமன்றி பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் தான் இராஜினாமா செய்ய தீர்மானித்துள்ளாதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.ஏற்கனவே தேசிய அமைப்பாளரான வணக்கத்துக்குரிய கொலன்னாவ சிறீ சுமங்கல தேரோ கட்சியிலிருந்தும் பாரளுமன்ற உறுப்பினர் அங்கத்துவத் திலிருந்தும் இராஜினாமா செய்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## இல. இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து ஆராய இந்திய உயர் மட்டக்குழுவினர் கொழும்பிற்கு வரவுள்ளனர்

இலங்கை-இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தத்தின் இறுதி விடயங்களை முடிவு செய்யவென இந்திய உயர்மட்ட பாதுகாப்பு உறுப்பினர் கள் அடங்கிய குழுவொன்று ஒரு சில நாட்களில் கொழும்பு வரவுள் ளனர்.

இந்தியாவிடமிருந்து பாது காப்பு உபகரணங்கள் வாங்கும் ஒப்பந்தத்தின் இறுதி முடிவுகளை எடுப்பதற்காகவும், மேலதிக பாதுகாப்பு உதவிகளை இலங் கைக்கு வழங்குவது குறித்து ஆரா யவும், இலங்கை-இந்திய பாது காப்பு ஒப்பந்தத்தின் இறுதி விட யங்களை முடிவு செய்யவுமென கொழும்பு வருகைதரவுள்ள இக் குழு, சிறிலங்காப் பாதுகாப்பு உயரதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சு உயரதிகாரிகள் உட்பட சனாதிபதி, பிரதமர் போன்ற முக்கி யஸ்தர்களையும் சந்தித்து இது குறித்து ஆராயவுள்ளார்கள். கடந்த ஒரு வருடமாக இறுதி முடிவு எட் டப்படாது இழுபடுவதாகக் கருதப் படும் இந்த ஒப்பந்தத்தை விரிவாக ஆராய்ந்து, முடிவு எட்டப்படாதற் கான காரணங்களைச் சரிசெய்து, தொடரும் இரு மாதங்களுக்குள் இவ் ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட ஒழுங்கு செய்யவே இந்தக் குழு வருகை தரவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் தகவல்கள் தெரிவிக் கின்றன. சிறிலங்காப் பாதுகாப்பு செயலாளர் சிறில் ஹேரத்துடன் முதற்கட்டப் பேச்சுக்களை நடாத்த வுள்ள இக்குழுவினர், தொடரும் சில தினங்களில் பல தரப்பட்ட உயரதிகாரிகளுடனும் கூட்டுப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள் ளார்கள். இந்த ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவிடமிருந்து சிறிலங்கா பெறவுள்ள அதிபலம்வாய்ந்த ஆயுதக் கொள்வனவில், சீற்றாக உலங்குவானூர்தி நீரிலும் நிலத் திலும் பயணிக்கக்கூடிய போர் விமானங்கள், விமான போர் பேராயுதங்கள், ராக்கட் குழல் தாங் கிகள், ஆட்டிலறிகள், செல்கள், 7.62 மி.மீ. குழல் துப்பாக்கிகள், தளபாடங்கள், டாட்டா ரக்குகள், இராணுவ ஜீப்புக்கள் மற்றும் பஸ்கள் உட்பட ஏராளமான இரா ணுவ மற்றும் முப்படைத் தள பாடங்கள் அடங்குகின்றன. இவை தவிர, இராணுவப் பயிற்சிகள், போர்உபாயங்கள், ஆலோச னைகள், இந்திய இராணுவத் தளங்களில் விசேட பயிற்சிகள், உளவுத்துறை ஒத்துழைப்பு, எல் லைகளில் இணைந்த பாதுகாப்பு போன்ற இன்னும் பல விடயங்க ளும் இப்பாதுகாப்பு ஒப்பந்தத்தில் அடங்குகின்றன.இந்தியப் பொதுத் தேர்தலின் பின்னர் கிடப்பிலிருந்த இவ் ஒப்பந்தம், பிரமர் மஹிந்த ராஜபக்ஷ கதிர்காமர் போன்றோர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் நடாத்திய சந்திப்புக்க ளைத் தொடர்ந்து மீண்டும் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.இலங் கையில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கும், மலையகத் தமிழருக் கும் மிகவும் பாதகமாக அமைந்து விடக்கூடிய இந்த ஒப்பந்தம் குறித்து மலையகத் தமிழரும் முஸ் லிம்களும் பாராமுகமாக இருப்பது குறித்து அரசியல் அவதானிகள் ஆச்சிரியம் தெரிவித்துள்ளார்கள்.

## புலிகளின் இ.நிர்வாக யோசனை குறித்து வெளியில் கருத்துத் தெரிவிக்கப்போவதில்லை

### திலக் கருணாரத்ன கூறுகிறார்

விடுதலைப் புலிகளினால் முன் வைக்கப்பட்டுள்ள தன்னாட்சியுள்ள இடைக்கால நிர்வாக யோசனை குறித்து கட்சிக்குள் தான் கருத் துக்களை தெரிவிப்பேனே தவிர பகிரங்கமாக அதனை விமர்சிக்கப் போவதில்லை என ஐக்கிய தேசிய கட்சியில் மீண்டும் இணைந்துள்ள பேரினவாதக் கட்சியான சிஹல உறுமயவின் தலைவரான திலக் கருணாரத்ன கூறியுள்ளார்.

சிகல உறுமயக் கட்சியின் ஸ்தாபகரான இவர் அக்கட்சியைக் கைவிட்டு மீண்டும் நேற்று ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டார். பண்டாரகம தொகுதி யின் ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளராக நியமிக்கப்பட் டுள்ள திலக் கருணாரத்ன நேற்று அக் கட்சியின் கூட்டமொன்றிலும் கலந்து கொண்டு உரையாற்றி னார்.இக்கூட்டத்தின் பின்பு ஊடக வியலாளருடன் உரையாடிய போதே திலக் கருணாரத்ன மேற் கண்டவாறு கூறியுள் ளார்.ஜே. வி.பி.யை உள்ளடக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனியிலும் பார்க்க ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தெளிவான அரசியல் நோக்கு இருப்பதால் தான், அரசியல் வாழ் வின் இறுதிக் கட்டத்தில் அந்த கட்சியில் இணைந்து செயல்பட தீர்மானித்ததாகவும் அவர் கூறி யுள்ளார்.விடுதலைப் புலிகளினால் முன் வைக்கப்பட்டுள்ள தன்னாட்சி யுள்ள இடைக்கால நிர்வாக யோச னையை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுள்ள நிலையில் தங்களுடைய நிலைப்பாடு என்ன எனக்கேட்ட போது, ஐக்கிய தேசிய கட்சி அந்த யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க லாம் என்று தான் கூறுகின்றதே தவிர அதனை ஏற்றுக் கொண்ட தாகக் கூறவில்லை. இது தொடர் பாக எனது கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை.இது பற்றி கட்சிக்குள் கருத்துக்களை முன் வைப்பேனே தவிர பகிரங்கமாக விமர்சிக்க மாட்டேன் ஒஸ்லோ பிரகடனத்தையும் விடுதலைப் புலிக ளினால் முன் வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக யோசனை யையும் பேச்சுவார்த்தையை ஆரம் பிப்பதற்காக ஒன்றோடொன்று தொடர்பு படுத்த முடியாது என்றும் அவர் பதிலளித்தார்.

## மல்வத்த அஸ்கிரிய பீடாதிபதிகள் சனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு

கண்டியிலுள்ள சனாதிபதி வாசஸ்தலத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை மல்வத்தை மற்றும் அஸ்கிரிய ஆகிய பௌத்த அதியுயர் பீடங்களின் பிரதம மகா நாயக்க தேரர்கள் இருவரும் சந்தித்துள்ளார்கள்.

தற்போதைய சமாதான முன்னெடுப்புக்கள், நாட்டின் அரசியல் சூழ்நிலை மற்றும் பலவித விடயங்கள் குறித்தும், விரைவில் வரவுள்ள பிரதேச சபைத் தேர்தல் குறித்துமே இப்பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. சில தினங்களுக்கு முன்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மல்வத்தை பீடாதிபதியைச் சந்தித்து சமாதான முயற்சிகள் குறித்து விரிவாக ஆராய்ந்தமையும், அஸ்கிரிய பீடாதிபதி இவர்களுடனான தமது சந்திப்பை சிங்கள இனவாதிகளின் எதிர்ப்பின் காரணமாக இறுதி நேரத்தில் ரத்து செய்திருந்ததும் இங்கே குறிப்பிடத்தக்கது.

# முதியோரைப் பேணுவோம்

சமுதாயத்தில் மிகவும் பேணப்பட வேண்டிய முதியோர் இன்று சமுதாயத்தினின்றும் தனிமைப்படுத்தப்படு வதைக் காணக்கூடியதாகவுள்ளது. அவர்கள் வயதில் முதிர்ச்சியடைந்த போதிலும் அவர்களின் அனுபவம், அறிவு ஆகியவை எமது வாழ்க்கைக்கு நல்ல வழிகாட்டியாக அமையும். இதனை எமது இன்றைய சமூகம் உணராமல் முதியோர்களை ஒரு சுமையாக கருதுகின்றார்கள். இவ்வெண்ணக்கரு சமூகத்திலிருந்து விடுபட வேண்டுமாயின் முதியோர்கள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

அறுபது வயதைக் கடந்தவர்களை முதி யோர் எனக் கருதுகின்றோம். பொதுவாக இவர்கள் உழைக்க முடியாதநிலை. நோய் களின் தாக்கம் போன்ற காரணங்களினால் விரும்பியோ, விரும்பாமலோ இன்னொரு வரில் தங்கியிருக்க வேண்டிய நிலை உரு வாகின்றது.

முன்னைய காலங்களில் எமது சமுதாயக் கட்டமைப்பில் கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறை இருந்தது. இதன்போது முதியோர்கள் ஒரு சுமையாகக் கருதப்படவில்லை. குடும் பத்திலுள்ள ஒவ்வொரு அங்கத்தவர்களும் முதியோர்களையும் அங்கத்தவராக ஏற்றுக் கொண்டதுடன் அவர்களைப் பேணுவது, பராமரிப்பது என்பதில் உணர்வுபூர்வமாகப் பங்குகொண்டுள்ளனர். எந்தவொரு முடிவு எடுத்தலிலும் அவர்களது பங்கு முக்கிய மாகக் கருதப்பட்டது. அவர்களுக்குரிய அனைத்து மரியாதைகளும் வழங்கப்பட் டிருந்தது.

ஆனால் தற்போது எமது சமுதாயக் கட்டமைப்பிலிருந்து கூட்டுக்குடும்ப வாழ்க்கைமுறை நீங்கி தனிக்குடும்ப வாழ்க்கைமுறை நடைமுறையில் உள்ளது. இம்முறையில் ஒரு குடும்பத்தில் உள்ள அங்கத்தவர்கள் திருமணம் செய்து தனிக் குடித்தனம் செல்வதால் அக்குடும்பத்திலுள்ள முதியோர்கள் அனாதரவாகக் கைவிடப்படும் நிலை தொடர்கின்றது.

தனது குடும்பத்திற்காகவே தன்னை அர்ப்பணித்து அல்லும், பகலும் உழைத்து தனது பிள்ளைகளின் நல்வாழ்வுக்காகவே தனது வாழ்நாளைத் தியாகம் செய்த வயது முதிர்ந்த பெற்றோர்கள், தமது பிள்ளைக ளாலேயே புறந்தள்ளப்படுவது, அவர்களைச் சுமையாகக் கருதுவது வேதனைக்குரிய விடயமாகும்.

இவ்வாறு கைவிடப்படும் முதியோர் இறுதியில் தங்கள் வாழ்நாளைக் கழிக்க முதியோர் இல்லத்தையே நாடவேண்டி யுள்ளது. அண்மைக்கால ஆய்வுகளின்படி முதியோர் இல்லத்தில் வாழ்பவர்கள் மிகுந்த மன நெருக்கடிகளுக்கு உள்ளாகி மனவிரக்தி யுடன் வாழ்வதாகத் தெரியவருகிறது. அவர் களின் விருப்பமெல்லாம் தங்கள் சமூகத்தில் தங்கள் குடும்பத்துடேனேயே தங்கள் இறுதிக்காலகட்டத்தை கழிக்கவிரும்புவதாக அவ்வாய்வு மேலும் தெரிவிக்கின்றது.

கடும்போர் அதனால் ஏற்பட்ட இடப் பெயர்வுகள் போன்ற நிலைமைகள் இவ்வா றான பிரச்சினைக்கு அடிப்படைக் காணரமாக அமைந்திருந்தாலும் கூட இனி எமது தாயகத்தில் இவ்வாறான நிலைதோன்றக் குடும்பங்களும், சமூகமும் இடமளிக்கக் கூடாது.

முதியவர்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய எத்தனையோ விட யங்கள் உள்ளன. அவர்கள் முன்னர் செய்த தொழில்களில் மிகவும் பாண்டித்தியம்



பெற்றவர்களாக இருப்பார்கள். அவர்களிடம் இருந்து தொழில்நுணுக்கங்களைப் பெற முடியும். இதைவிட அறிவியல், அரசியல், வானிலை, மருத்துவம்(வீட்டுவைத்தியம்), சோதிடம் போன்ற விடயங்களில் அறிவுடை யவர்களாக, அனுபவமுடையவர்களாக இருப்பார்கள். அவர்களை நாம் எமது தேசிய சொத்துக்களாக மதிக்க வேண்டும். வாழ்க்கை ஓட்டத்தில் முதுமையை நாம் விரும்பியோ, விரும்பாமலோ அனுபவித்தே ஆக வேண்டும். இன்றைய இளைஞர் நாளைய முதியோர். எனவே இன்றைய இளைஞர்கள், முதியோர்களை ஏற்று அவர்க ளைப் போற்றிப் நடப்பார்களாயின் நாளை அவர்கள் முதியவர்களாக ஆகின்றபோது மதிக்கப்படும் நிலையேற்படும்.

மேலும் ஒவ்வொரு மனிதனும் தனது முதுமைக்காலத்தை எவ்வாறு கழிக்க வேண்டும் என்பதை முன்கூட்டியே திட்டமிட்டு அதற்கேற்ப முன்நடவடிக்கை களை செய்துகொள்வதன் மூலம் முதுமைக் காலத்தை மிகவும் பயனுள்ளதாகவும், சந்தோசமாகவும் கழிக்கக்கூடியதாக இருக்கும்

இவற்றைவிட சமூக மட்ட அமைப் புக்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் போன்றன முதியவர்கள் விடயத்தில் கூடிய அக்கறை எடுக்க வேண்டும். முதியவர்க ளுக்கான பகல் பராமரிப்பு நிலையம், பொழுதுபோக்கு மையங்கள் அமைப்பதன் மூலம் அவர்களுக்கு மகிழ்ச்சியான மன நிலையை ஏற்படுத்தி அவர்களின் இறுதிக் காலத்தை சந்தோசமாகக் கழிக்க வழி சமைத்துக் கொடுக்கலாம்.

நடராசா தசரதன் B.Com.(Hons)
சமூகசேவை உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
கண்டாவளை.

# முதியோர்களின் சுற்றுலா

எமது மூதாளர்களை பேணிப் பாதுகாக்க வேண்டியது எங்கள் ஒவ்வொருவருடைய தலையாய கடமையாகும்.

இந்த வகையில் முதியவர்கள் குறிப்பாக யுத்த அனர்த்தம் இடம் பெயர்வுகளின் காரணமாக அனாத ரவான நிலையில் கைவிடப்பட்ட பல முதியோர்கள் அல்லலுற்ற வேளையில் அவர்களுக்கு அபயக் கரம் நீட்டி ஆதரவு நல்கிடும் வகையில் கிளிநொச்சி அரச அதிபர் இராசநாயகம் அவர்களின் பெரு முயற்சியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசர ணையுடன் 1997 ஆண்டு ஜயனார் புரம் வன்னேரிக்குளம் கிராமத்தில் யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லம் ஆரம்பிக்கப் பெற்றது. முதியோர் காவலர் அமரர் மு.கந்தசாமி அவர்களை தலைமை யாகக்கொண்டு ஆரம்பிக்கப் பெற்ற மேற்படி முதியோர் இல்லம் அவர் அமரத்துவம் எய்திய பின்பு கரைச்சி பிரதேச முன்னாள் செயலர் பொன் நித்தியானந்தம் தலை மையிலான நிர்வாக அமைப்புடன் தற்போது செயற்பெற்று வரு கின்றது.



ஆதரவற்ற முதியோர்களுக்கு உறைவிடம், உணவு உட்பட அனைத்து அடிப்படை வசதிகளை யும் இல்லம் வழங்கி வருவதுடன் அவர்களது பொழுது போக்கினை நிறைவு செய்யும் வகையில் பத்திரி கைகள், சஞ்சிகைகள் வாசிப்ப தற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு மற்றும் வானொலி கேட்டல், தொலைக்காட்சி வசதிக ளும் வழங்கப் பெற்று நல்ல முறை யில் முதியோர்கள் பராமரிக்கப் பெற்று வருகின்றனர்.

மற்றும் இவர்களுக்கான ஆலய வழிபாட்டு வசதிகள்யாவும் வழங்கப் பெற்று, நல்லமுறையில் முதியோர்கள் பராமரிக்கப்பெற்று வருவதுடன், இவர்கள் தினமும் பூசையில் கலந்து ஆன்மீக ஈடேற் றத்திற்கான பிரார்த்தனைகளிலும் தியானத்திலும் ஈடுபடக் கூடிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப் பெற்றுள்ளது.

தொடர்ந்தும் முதியவர்கள் இவ்வில்லத்தில் இருப்பதன் விளைவாக அவர்களுக்கு ஏற்படும் மன இறுக்கத்தினை தளர்த்தும் வகையில் ஆலயதரிசன சுற்றுலா யாத்திரையினையும் நிலையத் தினர். ஏற்படுத்தி வருகின்றனர். இந்த வகையில் அண்மையில் மேற்படி முதியோர் இல்லத்திலி ருந்து ஆண்,பெண் இருபாலாரு மடங்கிய 32 முதியோர்கள் முதி யோர் இல்ல இணைப்பாளர் வை.குகராசா, நிர்வாக உத்தி யோகத்தர் க.குலநாயகம் ஆகி யோரின் ஒழுங்குபடுத்தலில் யாழ். நல்லூர் முருகன் ஆலயம், தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம், சன்னதிமுருகன் ஆலயம், வல்லிபுரம் ஆழ்வார் ஆலயம், யோகர் சுவாமிகள் கோவில் கொண்ட (சமாதி) கொழும்புத் துறைக்கும் அழைத்துச் செல்லப் பெற்று. ஆலயத்தரிசிப்பு மற்றும் வழிபாடுகளில் கலந்து கொண்ட மனமகிழ்வுடன் அனைவரும் முதியோர் இல்லத்திற்கு திரும்பி யுள்ளனர்.



இவர்களுக்கான போக்கு வரத்து வாகன வசதியினை வட பிராந்திய பார ஊர்திகள் சங்கத் தினர் வழங்கினர்.

யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லம் தற் போது 63 பயனாளிகளுடன் கடந்த 16ஆம் திகதியன்று யோகர் சுவாமி கள் திருவடிநிலைய முதியோர் இல்லத்தின் 7ஆம் ஆண்டினை நிறைவு செய்து, 8ஆம் ஆண்டில் தமது நற்பணியினை தொடர்ந்துள் ளமை குறிப்பிடத்தக்கது.

கனகபுரச் சோதி.

## ரூ.45 மில்லியன் வங்கி வைப்பு குறித்து விளக்கமளிக்க ரத்வத்தவுக்கு இறுதி அழைப்பு!

அதிகளவு நிதியை வங்கி வைப்பில் சேர்த்து வைத்திருப்பதற் கான விளக்கம் அளிக்கும்படி சிறி ங்காவின் முன்னாள் பிரதிப் பாது ப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத் பிற்கு லஞ்ச ஊழல் ஆணைக் ழுவால் இறுதி எச்சரிக்கைக் தம் அனுப்பப்பட்டுள்ளது. சுமார்45 மில்லியன். ரூபாய்களுக் கும் அதிகமான தொகை ரத்வத் தவினால் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருப்பதாகவும், இவ்வா றான ஒரு பெரிய தொகையை எப்படிச் சம்பாதித்தார் என்ற விளக்கம அளிக்கப்பட வேண்டும் எனவும் லஞ்ச ஊழல் ஆணைக்குழு அதி காரியொருவர் தெரிவித்துள்ளார். வரும் நவம்பர் 2ஆம் திகதிக்கு முன் ரத்வத்த இவ் விளக்கத்தினை அளிக்க வேண்டும் என ஆணைக் குழு விரும்புவதாகவும் தனது சொத்துக் குறித்த திருப்திகரமான விளக் கத்தை ரத்வத்த அளிக்கா விட்டால் அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில முற்படுத் தப்படுவார் என்றும் அந்த அதிகாரி மேலும் கூறியுள்ளார். இது குறித்து ரத்வத்த தனது வழக கறிஞர்களுடன் ஆலோசித்து வருவ தாக 'சண்டே ஐலன்ட்'செய்தி வெளியிட்டுள்ளது.

## விலைவாசி ஏற்றத்தைக் கண்டித்து ஐ.தே.க. தொடர்போராட்டம்

(கொழும்பு)

விலைவாசி ஏற்றத்தைக் கண்டித்து ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை ஐ.தே.க.போராட்டம் நடத்தவுள்ளது. நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் பொருட்களின் விலையுயர்வை கண்டித்து மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை கண்டி, அனுராதபுரம், காலி மாத்தறை, சிலாபம், பதுளை, இரத்தினபுரி ஆகிய இடங்களில் நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசியல் உயர்பீடம் தீர்மானித்துள்ளது.



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

# நெஞ்சம் மறக்குமா?

கடந்த மாதம் 25 ஆம் திகதி லண்டன் ஓவல் மைதானத்தில் I.C.C மினி உலகக்கிண்ணக் கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணியை மேற்கிந்தியத் தீவுகள் அணி 2 விக்கெட்டுக்களால் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றியமை யாவரும் அறிந்ததே.

உண்மையில் அண்மைக்காலப் போட்டிகளில் இவ்இறுதிப் போட்டி மிகவும் பரபரப்பானது என்பது சொல்லித் தெரியத் தேவையில்லை. காரணம் 218 என்ற வெற்றியிலக்கை எட்டவேண்டிய நிலையை மேற்கிந்தியத் தீவுகள் 8 விக்கெட்டுக்களையிழந்து 147 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மேலும் 71 ஓட்டங்களைப் பெறுவது கடைசி இரு விரர்களுக்கும் பெரும் கடினமான விடயமாகும். தனது அணிக்கே வெற்றி வாய்ப்பு என எண்ணிய இங்கிலாந்து வீரர்கள் தமது அறையினுள் ஆடிப்பாடிக் கொண்டாடினர். ஆனால் இறுதிநேரத்தில் மேற்கிந்தியத் தீவுகள் 2 விக்கெட்டுக்களால் வெல்வதற்கு பிரட் ஷோவும் கர்ட்னி பிரவுனும் ஆடிய "ஆட்டத்தை" மேற்கிந்தியத்தீவு ரசிகர்கள் மறந்து விடமாட்டார்கள். அத்துடன் தொடர் நாயகன் விருது பெற்ற ராம்நரேஸ் சர்வான் இறுதிப்போட்டி வரை அணியைக் கொண்டு சென்றதும் விசேட அம்சமாகும். ஓவல் மைதானத்தை இருள் சூழ்ந்து பனியும், குளிர்காற்றும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்த வேளை இந்த 9 ஆவது விக்கெட் இணை நடத்திய நாடகம் அதைவிட விசேடமாகும்.

கர்ட்னி, பிரட்ஷோ இருவரும் அச்சம், ஏக்கம், அவதி ஆகியவற்றை ஓவர்கள் முடியும் தோறும் இருவரும் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டனர்.

1979 இக்குப்பின் அதாவது 25 வருடங்களுக்குப் பின்னர் அவர்கள் பெற்ற பெரும் வெற்றியாகும்.

ஆட்ட நாயகனாக விருது பெற்ற பிரட் ஷோ 1974 ஆம் ஆண்டு கறுப்பினத்தைச் சேர்ந்த சாதாரண குடும்பத்தில் பிறந்தவராவார். அவர் 4ஆம் தரத்தில் படித்துக் கொண்டிருக்கும் போது அரச வம்சத்தவர்களின் நடனத்தைக் கற்றுக்கொள்ளவே பெரிதும் விரும்பினார். அப்போது வீதி தோறும் நடைபெறும் நாடகங்களைப் பார்த்து ரசித்துவந்த பிரட்ஷோ பாபடோஸ் சிறுவர்கள் கிரிக்கெட் ஆடுவதைக் கண்டதும் அவர்கள் பின்னால் திரிந்தார். அதனால் அவர் வீதி நாடகங்களைக் கைவிட்டு கிரிக்கெட் விளையாட்டில் கவனம் செலுத்தினார்.




அதன் பலனாக 19 வயதுப்பிரிவு அணியில் அவர் இணைக்கப்பட்டு சிறந்த பந்து வீச்சாளராக மிளிர்ந்ததுடன் அதன் தலைவராகவும் நியமிக்கப்பட்டார். 24 வயதில் முதலாவதாக யமேக்கா அணிக்கெதிரான முதல்தரப்போட்டியில் பிரவேசித்த அவர் அப்போட்டியில் 109 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார்.

அவர் 915.3 ஓவர் பந்துவீசி 2708 ஓட்டங்களைக் கொடுத்து 112 விக்கெட்டக்களை வீழ்த்தியுள்ளார்.

I.C.C இறுதிப் போட்டியில் இங்கிலாந்தின்விக்ரம் சோலங்கியை 04 ஓட்டங்களுக்கும், அணித்தலைவர் மைக்கல் வோனை 07 ஓட்டங்களுக்கும் ஆட்டமிழக்கச் செய்த பிரட்ஷோ பனியும், குளிர்காற்றும், இருளும் சூழ்ந்த நேரத்தில் பனிப்போர் நடத்தியதை மேற்கிந்தியத்தீவு மக்கள் எப்போது மறப்பார்களோ?

— வடிவேல்

# சவாலில் வென்ற கங்குலி

இந்திய, அவுஸ்திரேலிய அணிகள் இடையிலான டெஸ்ட் தொடரின் போது பல்வேறு சுவையான சம்பவங்கள் நடந்துள்ளன. இதில் ஒன்றை இங்கே அசை போடுவோமா...

அவுஸ்திரேலிய அணியின் வெற்றிகரமான தலைவராக வலம் வந்தவர் ஸ்டீவோ இவர் கெலியாக, அதே நேரத்தில் தவறை சுட்டிக் காட்டி பேசுவதில் வல்லவர். 1999 இல் நடந்த உலகக் கோப்பை போட்டியின் போது வோ அடித்த பந்தை பிடிக்கத் தவறினார். தென்னாபிரிக்காவின் கிப்ஸ் உடனே "பிடியை மட்டும் விடவில்லை, உலக



கோப்பையையும் தவறவிட்டீர்கள்" என்று கிண்டல் அடித்தார் ஸ்டீவோ.

இதே வார்த்தை இந்தியாவிலும் பயன்படுத்தினார் ஸ்டீவோ. ஆனால் விளைவுதான் வேறு மாதிரி இருந்தது. இச்சம்பவம் கொல்கத்த டெஸ்ட் (2000-01) போட்டியின் போது நடந்தது இந்திய அணி ஐந்தாம் நாள் ஆட்டத்தில் முன்னதாகவே துடுப்பாட்டத்தை நிறுத்தியது.தேநீர் இடைவேளைக்கு முன் அவுஸ்திரேலியா மூன்று விக்கெட்டுகளை இழக்க இந்தியாவின் வெற்றிக்கான நம்பிக்கை அதிகரித்தது. இருப்பினும் ஹெய்டன், ஸ்டீவோ பொறுப்பாக ஆட வெற்றிக் கனவு மெல்ல மறையத் தொடங்கியது.இந்தக் கட்டத்தில் ஸ்டீவோ அடித்த பந்தை 'ஸ்லிப்' திசையில் இருந்த கங்குலி பிடிக்கத் தவறினார். இதற்கு "கப்டன் சார்... பிடியை மட்டுமல்ல டெஸ்ட் வெற்றியையும் கோட்டை விட்டீர்கள்" என்றார் ஸ்டீவோ.

இந்த வார்த்தைகள் இந்திய அணி வீரர்கள் மத்தியில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியதுடன் 'வென்று காட்ட வேண்டும்' என்ற துடிப்பு வீரர்கள் மத்தியில் பிறந்தது. சிறிது நேரத்தில் ஹர்பஜன் பந்தை வீசி ஸ்டீவோ ஆட்டமிழந்தார். இவர் வெளியேற இந்திய வெற்றியும் உறுதியானது.

# சேற்றுக்குள்ளும் செந்தாமரை

அவுஸ்திரேலிய அணியின் டெஸ்ட் வீரர்கள் வரிசையில் என்றும் போற்றப்படும் சகலதுறை வீரர் கீத்மில்லர் கடந்த வாரம் தனது 84 ஆவது வயதில் காலமானார். டொன்பிரட்மன், நீல் ஹான்வி. ஆர்தர்மொரிஸ் ஆகிய அவுஸ்திரேலியக் கிரிக்கெட் ஜாம்பவான்கள் வரிசையில் கீத்மில்லருக்குச் சிறப்பான இடமுண்டு.

சிறந்த சகலதுறை வீரரான மில்லருக்கு இன்னொரு பெயரும் உண்டு.

இவர் ஒரு சிறந்த விமானமோட்டியும் கூட. சிறந்த பண்பாளராகவும், அமைதியான சுபாவம் உடைய வராகவும் விளங்கிய மில்லர் அக்காலகட்டத்தில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சங்கத்தினருடன் நல்ல உறவு முறையை வளர்த்துக் கொள்ளவில்லை என அவர்களது நண்பர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். அதுவே அவரை 55 டெஸ்ட் போட்டிகளில் மாத்திரம் விளையாடவைத்தது எனவும் கூறப்படுகின்றது.

அவுஸ்திரேலிய அணி சார்பாக விளையாடித்தற்போது வரை உயிர்வாழும் 92 வயதுடைய வீரர் பில்பிரவுண் இவரைப்பற்றித் தெரிவிக்கும் போது:



நான் விளையாடும் போது சிறந்த சகலதுறை வீரராக இனங்கண்டது கீத்மில்லரைத் தான். அவரால் துல்லியமாகப் பந்துவீச முடியும். அதிரடித் துடுப்பாட்டத்தில் இறங்க முடியும். சிறந்த களத்தடுப்பு வீரர் அவர். அதுமட்டுமல்லாது என்னை ஆச்சரியப்பட வைத்த இன்னொரு விடயம். அவரால் விமானத்தையும் செலுத்தமுடியும் என்பது தான்.

அந்நேரம் இடம்பெற்ற போட்டிகளில் புதுபந்துகள் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் போட்டியினிடையேபரிமாறப்பட்டால் சந்தேகமின்றி அது கீத்மில்லரின் கைகளுக்கே செல்லும்.

காரணம் புதுப்பந்து கிடைத்து விட்டால் மில்லரின் பந்து வீச்சைச் சமாளிப்பது என்பது எதிரணி வீரர்களுக்குப் பெரும் திண்டாட்டமே. அவர் ஒரு சிறந்த துடுப்பாட்ட வீரர். பந்துகளை வேகமாக எல்லைக்கோட்டிற்கு அனுப்பும் பாணி அவருடையது என்கிறார்.

1948 Invicible Team (வெல்லப்பட முடியாத அணி) என அழைக்கப்பட்டது. டொன் பிரட்மன் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி. அப்போது அவுஸ்திரேலிய அணி இங்கிலாந்துக்கான சுற்றுலாவை மேற்கொண்டிருந்தது. அப்போது அவுஸ்திரேலியாவின் முன்னணி வீரர்கள் பலரும் குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்கக் களமிறங்கிய மில்லர் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்து அவுஸ்திரேலியாவுக்குக் கௌரவத்தைப் பெற்றுக் கொடுத்ததுடன் பந்து வீச்சிலும் அசத்தி அவுஸ்திரேலியா வெல்லக் காரணமானார் மில்லர்.

தனது இறுதிக்காலத்தில் பெரும் பகுதியை இங்கிலாந்தில் கழித்த மில்லர் விமானம் ஓட்டுவது, குதிரையேற்றம் போன்றவற்றில் ஈடுபட்டார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வரலாற்றில் கீத் மில்லருக்கு ஒரு பெருமை உண்டு. கிரிக்கெட்டின் பிறப்பிடமான லோட்சில் உள்ள அருங்காட்சியகத்தில் அவுஸ்திரேலிய ஜம்பவான்கள் மூனறு பேரில் இவரின் படமும் வைக்கப்பட்டுள்ளது. மற்றயை இருவர் டொன்பிரட்மன், விக்டர் குரும்பர், கிரிக்கெட் உலகில் என்றும் மறக்காத ஒரு சிறந்த சகலதுறை வீரனை மறப்பதென்பது கடினமானது தானே.

ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்றிய சிறிலங்கா கிரிக்கெட் அணிக்கு மீண்டும் ஒரு மகத்தான வெற்றி பாகிஸ்தான் மண்ணில் கிடைத்துள்ளது.

மூன்று நாடுகள் கலந்து கொண்ட பாக்டெல் முக்கோணக் கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டியில் பாகிஸ்தானைப் படுதோல்வி அடையச்செய்ததன் மூலம் தான் ஒரு பலமான அணி என்பதை இது நிரூபித்துள்ளது.

லாகூர் கடாபி மைதானத்தில் இரவு பகலாக நடைபெற்ற இப்போட்டியில் பலம் வாய்ந்த பாகிஸ்தான் அணியே வெற்றிபெற்றுக் கிண்ணத்தைச் சுவீகரிக்கும் என்ற நிலை அனைவர் மனங்களிலும் ஓடிக்கொண்டிருக்க, இதே லாகூர் மைதானத்தில் 1996 ஆம் ஆண்டு உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணியைத் தோற்கடித்து உலகக் கிண்ணத்தைக் கைபற்றிய நினைவைச் சிறிலங்கா அணி மீட்டிக் கொண்டது.

# தொடரும் ஏமாற்றம்

சிம்பாப்வேயுடனான இரண்டு போட்டிகளிலும் சிறிலங்காவுடனான இரண்டு போட்டிகளிலும் மகத்தான வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி இறுதிப் போட்டியில் தோல்வி அடைவோம் என்று நினைத்துக் கூடப்பார்த்திருக்க முடியாது. அவ்வளவுக்குத் திறமையான துடுப்பாட்ட வரிசை, பந்துவீச்சு வரிசை என்பன அசைக்க முடியாது என்ற தோற்றத்தை ஆரம்பப் போட்டியிலேயே வெளிக்கொணர்ந்தமை, பாகிஸ்தான் தனது சொந்த மண்ணில் இதுவரை நிறைவேற்றமுடியாது போன ஒருநாள் தொட ரில் வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரிக்கும் நம்பிக்கையை வலுவாக்கியிருந்தது.



நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் சிறிலங்கா அணியைத் துடுப்பெடுத்தாட அழைத்தது. இதற்கமையை சிறிலங்கா 35 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்து சரிவொன்றை ஏற்படுத்தியது. இது பாகிஸ்தானுக்குப் பிரகாசமான முடிவாக அமைந்தது.

ஆனால் பின்னர் வந்த அணித்தலைவர் அத்தப்பத்து விக்கெட் காப்பாளர் சங்கக்கார இணை அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்க கடினமான வெற்றி இலக்கு ஒன்றைப் பாகிஸ்தானுக்கு நிர்ணயித்தது. இவ்ஓட்ட எண்ணிக்கை பாகிஸ் தான் அணிக்குச் சிறிலங்காவுடனான கடந்த போட்டியைப் பொறுத்தவரை எட்டப்படும் இலக்காகவே காணப்பட்டது.

# நிவாரணம், புனர்வாழ்வு, மீளிணக்கத்துக்கான அமைச்சு

## வட-கிழக்கு புனர்வாழ்வு சம்பந்தமாக உலக வங்கியின் உதவியுடன் செயற் படுத்தப்படும் திட்டம்

## வடகிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம்-கட்டம் II

# பதவி வெற்றிடம்

வட-கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் கட்டம் II உலக வங்கியின் அனுசரணையுடன் செயற்படுத்தப்படும் திட்டமாகும். இத் திட்டம் வட கிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களிலும் இம் மாகாணத்திற்கு அண்டிய மாவட்டங்களான அனுராதபுரம், பொலநறுவை, மொனராகல, புத்தளம் ஆகிய மாவட்டங்களிலும் 2005-2010 ஆம் ஆண்டுகளில் செயற்படுத்தப்படவுள்ளது.

இச் செயற்றிட்டக் காலப்பகுதியில் செயற்ற ிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் ஆளணியினரை தற்காலிக அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்காக அவ்வப் பதவிகளுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளையும், ஏனைய தகைமைகளையும் பெற்றவர்களிடமிருந்து நிவாரணம், புனர்வாழ்வு, மீளிணக்கத்துக்கான அமைச்சினாலும், வடகிழக்கு மாகாண சபையினாலும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் நிரந்தரமாக வசிப்பவர்கள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

### பொது விதிகள்:

1. பதவி தற்காலிகமானது. முதலில் ஒரு வருடத்திற்கு நியமனம் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும். அதன் பின் நிறுவனத்தின் தேவைக்கு ஏற்பவும், முதல் வருட சேவைக் காலத்தில் திருப்திகரமாக சேவை ஆற்றியிருப்பினும் தொடர்ந்து சேவை நீடிப்பு வழங்கப்படும்.

2. **வயதெல்லை-** விண்ணப்பதாரி விண்ணப்பிக்கும் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் உள்ளவர்களுக்கும், அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கும் உச்ச வயதெல்லையிலிருந்து விதி விலக்களிக்கப்படும்.

3. **சம்பளம்** - ஒவ்வொரு பதவியின் கீழ் சம்பளத்திட்டம் குறிப்பிடப்பட்டுள்ளது. பதவிக்குரிய தகைமையிலும் பார்க்கக் கூடிய தகைமைகளும், வேலை அனுபவமும் பெற்றிருப்பின் முகாமைத்துவ சேவை சுற்று நிருபம் இல.10 இன் பிரகாரமும், பொ.நிர்வாக சுற்று நிருபம் இல.15/2003இன் பிரகாரமும் சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

4. **விண்ணப்பதாரி** இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். இத்திட்டம் செயற்படவுள்ள வடகிழக்கு மாகாணத்தின் எப்பகுதியிலும் இம் மாகாணத்திற்கு அண்டிய ஏனைய மாவட்டங்களிலும் கடமையாற்றக் கூடிய சுகதேக ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

5 விண்ணப்பதாரிகள் கீழ்க்காணும் ஆவணங்களின் போட்டோப் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.
 * கல்வித்தகைமைச் சான்றிதழ்கள்.
 * முன்னைய சேவை அனுபவச் சான்றிதழ்.
 * குறித்த மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர் என்பதற்கான சான்றிதழ்.

6.. **விண்ணப்பிக்கும் முறை** -தகுதியான விண்ணப்பதாரிகள் தங்களது முழுப்பெயர், முகவரி, பிறந்ததிகதி, கல்வித்தகைமைகள், தொழில்தகைமை, முன்னைய வேலை அனுபவங்கள் ஆகிய விபரங்களைக் குறிப்பிட்டு, தமது விண்ணப்பத்தினைத் தயாரித்து பதிவுத்தபாலில் திட்டப்பணிப்பாளர், திட்ட முகாமைத்துவப்பிரிவு, **இல.171, மின்சார நிலையவீதி, திருகோணமலை** .எனும் முகவரிக்கு 2004.10.28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். பதிவுத்தபாலில் அனுப்பப்படாத விண்ணப்பங்களும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பம் அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல்மூலையில் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். அரச சேவையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பத் தினை தமது திணைக்களத் தலைவர்/ செயலாளர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும்.

## 1.திட்டப் பொறியியலாளர் (Project Engineer)-26

*(திட்ட முகாமைத்துவப் பிரிவு– 02, மாவட்ட திட்டக் காரியாலயம்–24)*

**கல்வித்தகைமை:-** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பீ.எஸ்.சி (பொறியியல்) பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். (B.Sc Engineering

**அத்துடன்**

க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கில மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

கணினியில் போதிய பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

**சேவை அனுபவம:-** ஆகக்குறைந்தது 03 வருடங்கள் சேவை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

சம்பளம்:- ரூ.112,500- (5x2700)- 153,000/=

மேலதிக தகைமை, சேவை, அனுபவம் இருப்பின், சம்பளம் முகாமைத்துவ சேவை சுற்று நிருபம் இல.10இன் பிரகாரம் பேசித் தீர்க்கப்படும்.

## 2.வழிநடத்தல்,மதிப்பீடு செய்தல் உத்தியோகத்தர் (monitoring & Evaluation Officer)-13

*(திட்ட முகாமைத்துவப் பிரிவு–01, மாவட்ட திட்டக் காரியாலயம் – 12)*

**கல்வித்தகைமை:-** விஞ்ஞானம்/ சட்டம்/ விவசாயம்/பொருளாதாரம்/ வர்த்தகம்/ நிதி, வர்த்தக முகாமைத்துவம் அல்லது ஏனைய துறைகளில் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கில மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

கணினியில் போதிய பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

**சேவை அனுபவம்:-** அரச/ அரசசார்பற்ற நிறுவனங்களில் வழி நடத்தல், மதிப்பீடு செய்தல் வேலைகளில் ஆகக்குறைந்தது 03 வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பளம்:-** ரூபா112,500-(5x2700)- 153,000/=

மேலதிக தகைமை,சேவை அனுபவம் இருப்பின் சம்பளம் முகாமைத்துவசேவை சுற்று நிருபம் இல.10 இன் பிரகாரம் பேசித் தீர்க்கப்படும்.

## 3.சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் (Community Development Officer)-13

*(திட்ட முகாமைத்துவப் பிரிவு –01 மாவட்ட திட்டக் காரியாலயம்–12)*

**கல்வித்தகைமை:-** சமூகவிஞ்ஞானம்/ விஞ்ஞானம்/சட்டம்/விவசாயம்/ பொருளாதாரம்/ வர்த்தகம்/ நிதி வர்த்தக முகாமைத்துவம் அல்லது ஏனையதுறைக ளில் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கில மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

கணினியில் போதிய பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

**சேவை அனுபவம்:-** அரச/அரசசார்பற்ற நிறுவனங்களில் சமூக அபிவிருத்தி வேலைகளில் ஆகக்குறைந்தது 03 வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பளம்:-** ரூபா112, 500 - (5x2700) - 153,000/= மேலதிக தகைமை, சேவை அனுபவம் இருப்பின் சம்பளம் முகாமைத்துவ சேவை சுற்று நிருபம் இல -10 இன் பிரகாரம் பேசித் தீர்க்கப்படும்.

## 4.சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர் (Environ mental Development Officer)-01

*(திட்ட முகாமைத்துவப் பிரிவு – 01)*

**கல்வித்தகைமை:-** நீர் முகாமைத்துவம், சுற்றாடல்/ விஞ்ஞானம்/சட்டம்/விவசாயம்/ பொருளாதாரம் வர்த்தகம் /நிதி வர்த்தக முகாமைத்துவம் அல்லது ஏனைய துறைகளில் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கில மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

கணினியில் போதிய பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

**சேவை அனுபவம்:-** அரச/அரசசார்பற்ற நிறுவனங்களில் நீர் முகாமைத்துவம்/ சுற்றாடல்துறையில் ஆகக்குறைந்தது 03 வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பளம்:-** ரூபா112, 500 - (5x2700) - 153,000/= மேலதிக தகைமை, சேவை அனுபவம் இருப்பின் சம்பளம் முகாமைத்துவ சேவை சுற்று நிருபம் இல-10 இன் பிரகாரம் பேசித் தீர்க்கப்படும்.

## 5.நுண்கடன் பராமரிப்பு உத்தியோகத்தர் (Micro Credit Development Officer) -01

*(திட்ட முகாமைத்துவப் பிரிவு 01, மாவட்ட திட்டக் காரியாலயம் 12)*

**கல்வித்தகைமை:-** விஞ்ஞானம்/ சட்டம்/ விவசாயம்/ பொருளாதாரம் வர்த்தகம/ நிதி வர்த்தக முகாமைத்துவம் அல்லது ஏனைய துறைகளில் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கில மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

கணினியில் போதிய பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

**சேவை அனுபவம்:-** அரச/அரசசார்பற்ற நிறுவனங்களில் நுண்கடன் பராமரிப்பு தொடர்பான செயற்பாடுகளில் ஆகக்குறைந்தது 03 வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பளம்:-** ரூபா112, 500 (5x2700) 153,000/= மேலதிக தகைமை , சேவை அனுபவம் இருப்பின் சம்பளம் முகாமைத்துவ சேவை சுற்று நிருபம் இல -10 இன் பிரகாரம் பேசித் தீர்க்கப்படும்.

## 6.மகளிர் மேம்பாட்டு உத்தியோகத்தர் (Women Development Officer)-13

*(திட்ட முகாமைத்துவப் பிரிவு – 01)*

**கல்வித்தகைமை:-** விஞ்ஞானம்/சட்டம்/விவசாயம்/பொருளாதாரம்/வர்த்தகம்/நிதி வர்த்தக முகாமைத்துவம் அல்லது ஏனைய துறைகளில் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கில மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

கணினியில் போதிய பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

**சேவை அனுபவம்:-** அரச/அரசசார்பற்ற நிறுவனங்களில் மகளிர் மேம்பாடு சம்பந்தமான செயற்றுறைகளில் ஆகக்குறைந்தது 03 வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

சம்பளம்:- ரூபா112, 500 - (5x2700) - 153,000/= மேலதிக தகைமை, சேவை அனுபவம் இருப்பின் சம்பளம் முகாமைத்துவ சேவை சுற்று நிருபம் இல-10 இன் பிரகாரம் பேசித் தீர்க்கப்படும்.

## 07 .விவசாய அபிருத்தி உத்தியோகத்தர் (Agricul ture Development Officer)-13

*(திட்ட முகாமைத்துவப் பிரிவு – 01, மாவட்ட திட்டக் காரியாலயம் –12)*

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் விசேட வகுப்பில் 08 வருட கால சேவை அனுபவம் இருத்தல் வேண்டும்.

**அல்லது**

**கல்வித்தகைமை:-** விவசாயத்துறையில் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

க.பொ.த (சா/த )பரீட்சையில் ஆங்கில மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

கணினியில் போதிய பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

**சேவை அனுபவம்:-** அரச/ அரசசார்பற்ற நிறுவனங்களில் கமக்காரர் அமைப்பு/ விவசாய அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளில் ஆகக்குறைந்தது 03 வருடங்கள் கடமையாற்றிய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பளம்:-** ரூபா112, 500 - (5x2700) - 153,000/= மேலதிக தகைமை, சேவை அனுபவம் இருப்பின் சம்பளம் முகாமைத்துவ சேவை சுற்று நிருபம் இல -10 இன் பிரகாரம் பேசித் தீர்க்கப்படும்.

## 08 .மென்பொருள் உதவியாளர் (Software Asslstant)-01

*(திட்ட முகாமைத்துவப் பிரிவு –01 )*

கல்வித்தகைமை:- பொறியியல்/ விஞ்ஞானம்/ சட்டம்/ விவசாயம்/ பொருளாதாரம்/ வர்த்தகம்/நிதி வர்த்தக முகாமைத்துவம் அல்லது ஏனைய துறைகளில் பல் கலைக்கழகப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கில மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

அங்கீகரிக்கப்பட்ட கணினி நிறுவனமொன்றிலிருந்து அல்லது பல்கலைக் கழகமொன்றிலிருந்து கணினிக் கற்கை நெறிக்கான டிப்ளோமா தராதரப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

சேவை அனுபவம்:-

சம்பளம்:- ரூபா112, 500 - (5x2700) - 153,000/= மேலதிக தகைமை, சேவை அனுபவம் இருப்பின் சம்பளம் முகாமைத்துவ சேவை சுற்று நிருபம் இல -10இன் பிரகாரம் பேசித் தீர்க்கப்படும்.

## 09 .நிதி உதவியாளர் (Financial Asslstant)-12

*(மாவட்ட திட்டக்காரியாலயம் –12 )*

கல்வித்தகைமை:- பொது எழுதுனர் சேவையின் வகுப்பு 1 இல் 15 வருட கால சேவை அனுபவம் இருத்தல் வேண்டும். இச் சேவைக்காலத்தில் ஆகக்குறைந்த 05 வருடங்கள் நிதி உதவியாளராகக் கடமையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.

**அல்லது**

க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் ஆங்கிலம் உட்பட 06 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அதில் கணிதம், மொழி உட்பட 06 திறமைச் சித்திகளுடன் உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா தராதரப் பத்திரம் அல்லது அதற்கு சமமான டிப்ளோமாத் தராதரப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

கணினியில் போதிய பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

**சேவை அனுபவம்:-** கணக்கீட்டு வேலைகளில் ஆகக்குறைந்தது 05 வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பளம்:-** ரூபா.84,480 - (12x1560) - 3x 1800 - 108600/=

**மேலதிக தகைமை:-** சேவைஅனுபவம் இருப்பின் சம்பளம் முகாமைத்துவ சேவை சுற்று நிருபம் இல.10 இன் பிரகாரம் பேசித்தீர்க்கப்படும்.

## 10 .பிரதம எழுதுவினைஞர்(Chief Clerk)-12

*(மாவட்ட திட்டக்காரியாலயம் –12 )*

கல்வித்தகைமை:- பொது எழுதுனர் சேவையின் வகுப்பு 1 இல் 15 வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும்.

**அல்லது**

க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் ஆங்கிலம் உட்பட 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அதில் கணிதம், மொழி, உட்பட 04 திறமைச்சித்திகளுடன் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா தராதரப்பத்திரம் அல்லது அதற்குச் சமமான டிப்ளோமா தராதரப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

கணினியில் போதிய பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

**சேவை அனுபவம்:-** வெளிநாட்டுக் கடன் திட்டத்தின் கீழ் செயற்படும் நிறுவனங்களில் பொது எழுதுனர் கடமைகளில் ஆகக்குறைந்தது 08 வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

சம்பளம்:- ரூபா 69, 480 -( 5x1560)-93,840 மேலதிக தகைமை, சேவை அனுபவம் இருப்பின் சம்பளம் முகாமைத்துவ சேவை சுற்று நிருபம் இல. 10 இன் பிரகாரம் பேசித் தீர்க்கப்படும்.

## 11 .படவரைஞர்(Draughtsman)-24

*(திட்டமுகாமைத்துவப் பரிவு – 01,மாவட்ட திட்டக்காரியாலயம்–23 )*

**கல்வித்தகைமை:-** க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் ஆங்கிலம் உட்பட 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அதில் கணிதம், மொழி, விஞ்ஞானம் உட்பட 04 திறமைச்சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக்கல்லூரியினால் வழங்கப்பட்ட படவரைஞர் கற்கை நெறிக்கான 01 அல்லது 02 வருட டிப்ளோமா தராதரப்பத்திரம் பெற்றிருத்தல்வேண்டும்.

**சேவை அனுபவம்:-**ஆகக்குறைந்தது 03 வருடங்கள் சேவை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

சம்பளம்:- ரூபா 66, 840 - (5x1560) - 91,680/= மேலதிக தகைமை, சேவை அனுபவம் இருப்பின் சம்பளம் முகாமைத்துவ சேவை சுற்று நிருபம் இல. 10 இன் பிரகாரம் பேசித்தீர்க்கப்படும்.

## 12 .கணினித் தரவூட்டும் இயக்குனர் (Data Entry Operator)-14

*(திட்ட முகாமைத்துவப் பிரிவு–02 மாவட்ட திட்டக்காரியாலயம்–12)*

**கல்வித்தகைமை:-** க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் 06 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அதில் கணிதம், மொழி, ஆங்கிலம் உட்பட 04 திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

அங்கீகரிக்கப்பட்ட கணினி நிறுவனமொன்றிலிருந்து அல்லது பல்கலைக்கழகமொன்றிலிருந்து கணினிக் கற்றை நெறிக்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கீழ்க்காணும் பகுதிகளில் வேலை செய்யக்கூடிய தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

*. Using M.S. Dos commanda/ Windows
*. Word Processing M.S Word
*. Spread sheet M.S.Excel
*. Power Point
*. Data Base Management
*. Wep Desining

சேவை அனுபவம்:- கணினித் துறையில் ஆகக்குறைந்தது 03 வருடங்கள் சேவை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பளம்:-** ரூ 62, 880 - (5x1560) - 90,720/= மேலதிக தகைமை, சேவை அனுபவம் இருப்பின் சம்பளம் முகாமைத்துவ சேவை சுற்று நிருபம் இல.10இன் பிரகாரம் பேசித் தீர்க்கப்படும்.

## 13.எழுதுநர் உதவியாளர்(Clerical Assitant)-36

*(திட்ட முகாமைத்துவப் பிரிவு–01, மாவட்ட திட்டக்காரியாலயம–36)*

கல்வித்தகைமை:- க.பொ.த (சா.த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் ஆங்கிலம் உட்பட 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அதில் கணிதம், மொழி உட்பட 04 திறமைச்சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

கணினிக் கற்கைநெறியில் Micto soft office (Word, Excel, fower point, access) தராதரப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

சேவை அனுபவம்:- எழுதுனர் கடமைகளில் ஆகக்கறைந்தது 03 வருடங்கள் சேவை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

சம்பளம்:-ரூ.62,880 - (5x1560)- 90,720/= மேலதிக தகைமை சேவை அனுபவம் இருப்பின் சம்பளம் முகாமைத்துவ சேவை சுற்று நிருபம் இல.10இன் பிரகாரம் பேசித் தீர்க்கப்படும்.

## 14.களஞ்சியப் பொறுப்பாளர் (Store Keeper)-01

*(திட்ட முகாமைத்துவப் பிரிவு 01)*

கல்வித்தகைமை:- க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் ஆங்கிலம் உட்பட 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அதில் கணிதம், மொழி உட்பட 04 திறமைச்சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

கணினிக் கற்கை நெறியில் Micto soft office (Word, Excel, fower point, access) தராதரப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

**சேவை அனுபவம்:-** களஞ்சியப் பொறுப்பாளராக ஆகக்குறைந்தது 03 வருடங்கள் சேவை அனுபவம் பெற்றிருத்தல்வேண்டும்.

**சம்பளம்:-** ரூபா 62, 880 -(5x1560) - 90,720/= மேலதிக தகைமை, சேவை அனுபவம் இருப்பின் சம்பளம் முகாமைத்துவ சேவை சுற்று நிருபம் இல. 10 இன் பிரகாரம் பேசித் தீர்க்கப்படும்.

## 15.தொலைபேசி இயக்குனர்/கணினித் தரவூட்டும் இயக்குனர்-01 (Telephone Opreator/Dataentry Operator)

*(திட்ட முகாமைத்துவப் பிரிவு–01)*

**கல்வித்தகைமை:-** க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் ஆங்கிலம் உட்பட 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அதில் கணிதம், மொழி, உட்பட 04 திறமைச்சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

கணினிக் கற்கை நெறியில் Micro soft office (Word, Excel, Power point, access)தராதரப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

**சேவை அனுபவம்:-** தொலைபேசி இயக்குவது, தொலைபேசி அழைப்பு சம்பந்தமான பதிவேடு பேணுதல் போன்ற கடமைகளில் ஆகக்குறைந்தது 03 வருடங்கள் சேவை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பளம்:-** ரூபா 62,880 - ( 5x1560) - 90,720/= மேலதிக தகைமை, சேவை அனுபவம் இருப்பின் சம்பளம் முகாமைத்துவ சேவை சுற்று நிருபம் இல. 10இன் பிரகாரம் பேசித் தீர்க்கப்படும்.

## 16.சாரதி (Driver) -28

*(திட்ட முகாமைத்துவப் பிரிவு–04 .மாவட்ட திட்டக்காரியாலயம்–24)*

**கல்வித்தகைமை:-** க.பொ.த (சா/த) பரீட்சையில் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

சகல வாகனங்களையும் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

2ஆம்,3ஆம், மொழிகள் பேச, எழுதக் கூடிய ஆற்றல் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**சேவை அனுபவம்:-** ஆகக்குறைந்தது 03 வருடங்கள் சேவை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பளம்:-** ரூபா 60,180 - ( 5x1320) - 90, 540/= மேலதிக தகைமை, சேவை அனுபவம் இருப்பின் சம்பளம் முகாமைத்துவ சேவை சுற்று நிருபம் இல. 10 இன் பிரகாரம் பேசித் தீர்க்கப்படும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## பணிநிலை வேண்டுகை

குருகுலம் சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் கீழ்வரும் பணிநிலைகளுக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**01) பணிநிலை:- நிர்வாக அலுவலர்**

தகைமை- க.பொ.த [உ/த] சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**02) பணிநிலை:- களஞ்சியக்காப்பாளர்**

தகைமை-க.பொ.த [உ/த] வர்த்தகப்பிரிவில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**03) பணிநிலை:- திட்ட இணைப்பாளர்**

தகைமை-க.பொ.த [உ/த] சித்தியுடன் ஆங்கில அறிவும் இருந்தல் வேண்டும்

**04) பணிநிலை:- சமையலாளர்**

தகைமை-குறிப்பிட்ட பணியில் பட்டறிவு இருத்தல் வேண்டும்.

**05) பணிநிலை:- பராமரிப்பாளர்**

**06) பணிநிலை:- கணக்காளர்**

தகைமை- க.பொ.த.[உ/த] வர்த்தகப்பிரிவில் சித்தியடைந் திருத்தல்

குறிப்பு:- திட்ட இணைப்பாளர் தவிர்ந்த ஏனைய பணி நிலைகளுக்கு பெண்பாலோர் மாத்திரமே விண்ணப் பிக்கலாம்.

தகுதி வாய்ந்தவர்கள் தங்கள் விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து 25.10.2004 ஆம் திகதிக்கு முன்பு எமக்கு கிடைக்கக் கூடிய வகையில் அனுப்பி வைக்குமாறு வேண் டப்படுகின்றீர்கள்.

தொடர்புகட்கு:- குருகுலம் சிறுவர் பாரமரிப்பு
இல்லம்,
ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

(5192)


# கிளிநொச்சி-வட்டக்கச்சி பிரதான வீதியில் சீரான போக்குவரத்துக்கு வழிசெய்க!

## -எட்டு மாதங்களுக்கு முன் புனரமைக்கப்பட்டும் பயனில்லை!

(வட்டக்கச்சி)

கிளிநொச்சியிலிருந்து வட்டக் கச்சி செல்லும் பிரதான வீதி தற் போது குன்றும் குழியுமாக மோச மான நிலையில் காணப்படுவதால் வாகனப் போக்குவரத்துக்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண் டுள்ளன.

ஏற்கனவே தார்வீதியாக நீண்ட காலம் புனரமைக்கப்படாத நிலை யில் காணப்பட்ட இவ் வீதி கடந்த மார்ச் மாதம் கிரவல்மட்டும் போடப்பட்டு புனரமைக்கப்பட்டி ருந்தது.எனினும் தற்போது இப் பிரதான வீதி மீண்டும் மோசமான நிலைக்குச் சென்றுள்ளது. கடந்த 08 மாதங்களில் இத்தகைய நிலை ஏற்பட்டுள்ளமையையிட்டு அதிகா ரிகள் கவனத்தில் எடுத்துக்கொள் ளுவது அவசியமாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இதே தரத்திலான வீதிகள் தார் கொண்டு புனரமைக்கப்படும் வேளையில் மக்கள் செறிவாகவும் பெருமளவிலும் வாழ்ந்து வரும் வட்டக்கச்சி பிரதேசத்தினை நேரடி யாகக் கிளிநொச்சி நகருடன் இணைக்கும் ஒரேயொரு பிரதான வீதி சீரான முறையில் புனர மைக்கப்படாமையையிட்டு மக்கள் பெரும் விசனம் அடைந்துள்ளார்கள்.

இவ் வீதி தற்சமயம் புனர மைக்கப்படாத நிலையில் இருக்குமானால் எதிர்வரும் மாரி காலத்தில் வாகனப் போக்கு வரத்துக்கள் பெரும் நெருக்கடி களை எதிர்நோக்கும் என்பது திண் ணம் எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இவ் விடயத்தில் கவ னம் செலுத்தி உரிய நடவடிக்கை களை விரைவாக எடுப்பது அவ சியமா[illegible]ம். (12)

### ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தில் மின் வழங்கயோசனை

திருவையாறு பிரதேசத்திற்கு இரணைமடுக்குளத்தில்இருந்து ஏற்று நீர்ப்பாசனம் வழங்கப்பட உள்ளதாகவும், இதற்கான பாரிய நீர்ப்பம்பிகளை இயங்கச் செய்வ தற்கான மின் பிறப்பாக்கிகளைக் கொண்டு திருவையாறு பிரதே சத்திற்கு மின்சாரம் வழங்க முடி யும் எனவும், அவ்மின் கட்டண நிதியில் இருந்து ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தைச் செயற்படுத்தலாம் எனக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் திருவை யாறு கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்திறப்பு விழாவில் கலந்து கொண்டு கருத்துரையாற்றும் போது தெரிவித்தார். (15)

# சீர்கெட்ட வீதியை புனரமைக்க வேண்டுகை

கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் உள்ள குமுளமுனைக் கிராமத்தில் பிரதான வீதி சீர்கெட்ட நிலையில் உள்ளது. இதனைத் திருத்த அங்குள்ள சமூக அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து முல்லை மாவட்டப் பொறுப்பாளர் முகுந்தனின் நேரடிப் பார்வைக்குக் கொண்டு வந்ததன் விளைவாக உரியவர்களிடம் எடுத்துக் கூறியதையடுத்து உடனடியாக ஒரு கிலோ மீற்றருக்குவீதி புனரமைப்புச் செய்ய ரூபா பத்து இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்குரிய வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் முதற்கட்ட வேலைகளான வீதி கிளறப்பட்டு கிறவலும் பறித்த நிலையில் இரண்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டது. இதனால் கிராமத்திற்கான போக்குவரவுக்கு இடையூறு ஏற்பட்டதுடன் நடுவீதியில் கிரவல் பறித்துள்ளமையினால் வாகனங்கள் வீதியை விட்டு விலகிச் செல்ல முயற்சிக்கும் போது புதையுண்டு போவதை அவதானிக்க முடி கின்றது. மழைக்காலமும் தொடங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (05)


## காணிகள் விற்பனைக்குண்டு

767 இலக்கத்தையுடைய மூன்று ஏக்கர் வயல் காணியும், 767 இலக்கத்துடைய இரண்டேக்கர் மேட்டுக் காணியும்,நிரந்தரப் பயிர்களுடன் கிணறு, மலசலகூடம் வீட்டுடன் வீட்டுக்குரியதளபாடங்கள். விற்பனைக்குண்டு விலை பேசித் தீர்க்கலாம்.

க.சி.குமாரசாமி,
இல-767
ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி.

(5168)



## 17.பாதுகாப்பு உத்தியோகத்தர் (Security Officer )-02

*(திட்ட முகாமைத்துவப்பிரிவு-01*

**கல்வித்தகைமை:-** க.பொ.த (சா/த) பரீட்சையில் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**சேவை அனுபவம்:-** ஆகக்குறைந்தது 03 வருடங்கள் பாதுகாப்பு உத்தியோகத் தராகக் கடமையாற்றியிருத்தல் வேண்டும்.
**சம்பளம்:-** ரூபா58,680 - ( 5x1320) - 78,840/= மேலதிக தகைமை, சேவை அனுபவம் இருப்பின் சம்பளம் முகாமைத்துவ சேவை சுற்று நிருபம் இல. 10 இன் பிரகாரம் பேசித் தீர்க்கப்படும்.

## 17.கணக்காய்வு எழுதுனர் (Audit Clerk)-04

*(நிதிக்கணக்காய்வுப்பிரிவு)*

**கல்வித்தகைமை:-**
01. க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் ஆங்கிலம் உட்பட 06 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அதில் கணிதம், மொழி உட்பட04 திறமைச்சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.
02.க.பொ.த(உ/த) பரீட்சையில் 04 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
03. உயர்தேசியக் கணக்கியல் டிப்ளோமா தராதரப்பத்திரம் அல்லது அதற்குச் சமமான டிப்ளோமா தராதரப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

கணனிக் கற்கை நெறியில் டிப்ளோமா தராதரப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

**சேவை அனுபவம்:-** கணக்காய்வுக் கடமைகளில் ஆகக்குறைந்தது 03 வருடங்கள் சேவை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்

**சம்பளம்:-** ரூபா 69,480 - ( 5x1560) - 93,840/= மேலதிக தகைமை, சேவை அனுபவம் இருப்பின் சம்பளம் முகாமைத்துவ சேவை சுற்று நிருபம் இல. 10 இன் பிரகாரம் பேசித் தீர்க்கப்படும்.

## 18.அலுவலக ஊழியர் (Office Employee)-23

*(திட்ட முகாத்துபவப் பிரிவு-01, மாவட்ட திட்டக்காரியாலயம் – 22)*

**கல்வித்தகைமை:-** அரசினர் பாடசாலையில் 08 ஆம் வகுப்புப் பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.
**சம்பளம்:-** ரூபா 55,880 - (5x960) - 75,000/=மேலதிக தகைமை, சேவை அனுபவம் இருப்பின் சம்பளம் முகாமைத்துவ சேவை சுற்று நிருபம் இல. 10 இன் பிரகாரம் பேசித் தீர்க்கப்படும்.

## 19.வேலைமேற்பார்வையாளர் (Work super visor)-80

**கல்வித்தகைமை:-** க.பொ.த (சா/த) பரீட்சையில் 04 திறமைச்சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்பட்ட தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (NCT) பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக்கல்லூரியினால் வழங்கப்பட்ட படவரைஞர் கற்கை நெறிக்கான 01 அல்லது 02 வருட டிப்ளோமா தராதரப்பத்திரம் அல்லது அதனை மொத்த சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
**சேவை அனுபவம்:-** நீர்ப்பாசனத் திட்டங்கள், கட்டடங்கள் அமைத்தல் ஆகிய வேலைகளை மேற்பார்வை செய்ததில் ஆகக்குறைந்தது 03 வருடங்கள் சேவை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
**சம்பளம்:-** ரூபா 66,840 - (5x1560) - 91,680/= மேலதிக தகைமை, சேவை அனுபவம் இருப்பின் சம்பளம் முகாமைத்துவ சேவை சுற்று நிருபம் இல. 10 இன் பிரகாரம் பேசித் தீர்க்கப்படும்.

## 20.சிரேஷ்ட தொழில்நுட்ப உதவியாளர் (Senior Technical Assistant)-03

*(தொழில்நுட்பக் கணக்காய்வுப் பிரிவு (திருகோணமலை-01,மட்டக்களப்பு-01,வவுனியா-01)*

**கல்வித்தகைமை:-** இலங்கை தொழில் நுட்பசேவையின் அதி சிறப்பு வகுப்பைச் சேர்ந்தவராகவும், 15 வருடகால சேவை அனுபவம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

அல்லது

இலங்கை தொழில்நுட்ப சேவை வகுப்பு 1 ஐச் சேர்ந்தவராகவும் 20 வருடகாலசேவை அனுபவம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
**சம்பளம்-** முகாமைத்துவ சேவை சுற்று நிருபம் இல, 10 இன் பிரகாரம் பேசித்தீர்க்கப்படும்

## 21.சிரேஷ்ட படவரைஞர்(Senior Draughtsman)-03

*(தொழில்நுட்பக் கணக்காய்வுப் பிரிவு (திருகோணமலை-01,மட்டக்களப்பு-01,வவுனியா-01)*

**கல்வித்தகைமை:-** இலங்கை தொழில் நுட்பசேவையின் அதி சிறப்பு வகுப்பைச் சேர்ந்தவராகவும், 16 வருடகால சேவை அனுபவம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

அல்லது

இலங்கை தொழில்நுட்ப சேவை வகுப்பு 1 ஐச் சேர்ந்தவராகவும் 20 வருடகாலசேவை அனுபவம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
**சம்பளம்:-** முகாமைத்துவ சேவை சுற்று நிருபம் இல, 10 இன் பிரகாரம் பேசிதீர்க்கப்படும்.

**எஸ்.ரங்கராஜா,**
**பிரதம செயலாளர்-வகிமா,**
**திட்டவழிகாட்டல் குழு தலைவர்- நியாப்.**

(சி.10271)



தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலையில் பெய்த கன மழையால் கடந்த 4 வருடமாக நிரம்பாத முருகன் கோவில் தெப்பக்குளத்தில் மேல்மட்டம் வரை தண்ணீர் நிறைந்திருப்பதையும் குளங்கள், நிறைந்து பொதுமக்கள் இருக்கும் குடிசைப் பகுதிக்குள் வெள்ளம் புகுந்துள்ளதையும் படத்தில் காணலாம்.

# மகாராஷ்டிர முதல்வர் பதவி யாருக்கு

# சோனியாவுடன் தலைவர்கள் ஆலோசனை

(புதுடில்லி)

**மகாராஷ்டிர மாநில முதலமைச்சர் பதவி யாருக்கு என்பதைத் தீர்மானிக்க இறுதிக்கட்ட முயற்சிகளைக் காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி ஞாயிற்றுக்கிழமை மாலை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளார்.**

முன்னதாக அவரைத் தேசியவாதக் காங்கிரஸ் கட்சித்தலைவர் சரத்பவார் சந்தித்துத் தங்களுடைய தரப்பை விளக்கினார். இப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு பணிக்கப்பட்ட தேசியவாதக் காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதியும் மத்தியமைச்சருமான பிரபுல் படேல, காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் அகமது படேல் ஆகியோர் புதிய எம்.எல்.ஏ.க்கள் பட்டியலுடன் சோனியாவைச் சந்தித்து ஆலோசனையைத் தொடங்கினர். மகாராஷ்டிர சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் தேசியவாதக் காங்கிரஸ் கூட்டணி அதிக இடங்களில் வென்று ஆட்சி அமைக்கும் உரிமையைப் பெற்றிருப்பினும், முதல்வர் பதவியைப் பெறுவதில் இரண்டு கட்சிகளுக்கும் இடையே பலத்த போட்டி உள்ளது. இது தொடர்பாகத் தேசியவாதக் காங்கிரஸ் கட்சித்தலைவரும், மத்திய அமைச்சருமான சரத்பவார், தலைவர் சோனியாகாந்தியை டில்லியில் ஞாயிற்றுக்கிழமை சந்தித்துப் பேசினார். 1999 ஆம் ஆண்டு தேர்தலில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் படி கூட்டணியில் அதிக இடங்களில் வெற்றிபெறும் கட்சிக்கே முதல்வர் பதவியை அளித்திட வேண்டும். நடந்துமுடிந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சியைவிடக் கூடுதலாக 2 இடங்கள் பெற்றிருப்பதால் (71 இடங்கள்) தங்களுக்கே முதல்வர் பதவியை அளிக்க வேண்டும் என தேசியவாதக் காங்கிரஸ் கூறிவருகிறது. ஆனால் தமக்கு ஒதுக்கப்பட்ட 157 இடங்களில் 3 இடங்களை மார்க்சிஸ்ட் கட்சிக்கும், 2 இடங்களை இந்தியக குடியரசுக் கட்சிக்கும், 2 இடங்கள் சுயேட்சைகளுக்கும் காங்கிரஸ் ஒதுக்கியது. இதில் மார்க்சிஸ்ட் மூன்று இடங்களிலும், சுயேட்சைகள் 2 இடங்களிலும் வெற்றிபெற்றன. எனவே இந்த 5 இடங்களையும் சேர்த்தால் எங்களுடைய பலம 74 என்று காங்கிரஸ் கூறுகிறது. இதனிடையே டில்லியில் சோனியாவைச் சந்தித்த பிறகு நிருபர்களைச் சந்தித்தார் சரத்பவார். எங்களுடைய எண்ணிக்கையை நிருபிக்கத் தயாராகவுள்ளோம். எதையும் விவாதிக்க நாங்கள் தயாராகவுள்ளோம் கூட்டணியில் உள்ள இரு கட்சிகளும் தங்களுடைய ஆதரவு எம்.எல்.ஏ.க்களின் பட்டியலைத் தயாரிக்கவேண்டும் என்றார் அவர்.

# குண்டு முன்கூட்டியே வெடித்ததால் டில்லி–ஹவுத்ரா புகையிரதம் தப்பியது

## - பொலிசாரால் ஒரு தீவிரவாதி கைது

தண்டவாளத்தில் நடந்த குண்டு வெடிப்பில் இருந்து டெல்லி புகையிரதம் தப்பியது. அசாம், நாகலாந்து உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களைத் தொடர்ந்து பீகார் மாநிலத்திலும் மாவோயிஸ்டு தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருகிறது. கடந்த சனிக்கிழமை இரவு மாவோயிஸ்டு தீவிரவாதிகள் பீகார் மாநிலவழியாகச் செல்லும் டெல்லி-ஹவுரா எக்ஸ்பிரஸ் புகையிரதத்தைக் கவிழ்ப்பதற்காகத் தண்டவாளத்தில் குண்டு வைத்துக் கொண்டிருந்தனர். ரோட்டாஸ் மாவட்டம், கார்பாந்தியாநகர் ரெயில் நிலையத்தில் இருந்து 15 கி.மீ தொலைவில் தீவிரவாதிகள் இந்தத்துணிகரச் செயலில் ஈடுபட்டிருந்தனர். அப்போது எதிர்பாராத விதமாக ஒரு குண்டு வெடித்தது. அந்தச் சத்தம் கேட்டு புகையிரதத் திணைக்கள ஊழியர் சம்பவ இடத்திற்கு ஓடிவந்தார். ஆனால் அதற்குள் தீவிரவாதிகள் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர். உடனடியாக அவர் பொலிசாருக்குத் தகவல் கொடுத்தார். பொலிசார் விரைந்து வந்து சம்பவப் பகுதியை முற்றுகையிட்டனர். இதில் இருந்து ஒரு தீவிரவாதியைக் கைது செய்தனர். மற்றவர்கள் தப்பிஓடிவிட்டனர்.

டெல்லி-ஹவுரா ராஜதானி எக்ஸ்பிரஸ் ரெயில் ஒரு சில நிமிடங்களில் அந்த வழியாகக் கடந்து செல்ல இருந்தது. ஆனால் தீவிரவாதிகள் வைத்த குண்டு எதிர்பாராதவிதமாக முன்கூட்டியே வெடித்ததால் ராஜதானி எக்ஸ்பிரஸ் புகையிரதம் பெரும் ஆபத்தில் இருந்து மயிரிழையில் தப்பியது.

இந்தச் சம்பவத்தையடுத்து டெல்லி-ஹவுரா எக்ஸ்பிரஸ் கார்பாந்தியா ரெயில் நிலையத்தில் சில மணி நேரம் நிறுத்தி வைக்கப்பட்டது. தீவிரவாதிகள் வைத்த அனைத்துக் குண்டுகளும் அகற்றப்பட்ட பின்னர் எக்ஸ்பிரஸ் ரெயில் அந்த வழியாகக் கடந்து சென்றது. இந்தச் சம்பவம் வட மாநில ரெயில் பயணிகளிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. இதனிடையே பிடிபட்ட தீவிரவாதியிடம் பொலிசார் இரவு முழுவதும் துருவித்துருவி விசாரணை நடத்தினர். முதற்கட்ட விசாரணையில் அவனது பெயர் நரேந்திரன் என்பதும், அவனும் அவனது கூட்டாளிகள் சம்பு, வினோத், பரதன், நிசார், பாண்டே ஆகிய 5 பேரும் எக்ஸ்பிரஸ் புகையிரதத்தைக் கவிழ்க்கும் சதிவேலையில் ஈடுபட்டதாகவும் ஆனால் தவறுதலாகக் குண்டுவெடித்து விட்டதாகவும் கூறினான்.

தப்பி ஓடிய 5 தீவிரவாதிகளையும்பிடிக்கப் பொலிசார் மாநிலம் முழுவதும் தீவிரதேடுதல் வேட்டையில் ஈடுபட்டு உள்ளனர்.

# இந்தியாவில் தாக்குதல்கள் நடத்துமாறு தாஹுத் இப்ராஹிமுக்கு ஐ.எஸ்.ஐ கட்டளை

இந்தியாவில் உடனடியாக பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்தும் படி சர்வதேச பயங்கரவாதிகளின் பட்டியலில் இடம் பெற்றுள்ள தாவூத் இப்ராஹிமுக்கு பாகிஸ்தான் உளவு நிறுவனமான ஐஎஸ்ஐ உத்தரவிட்டுள்ளது. அவ்வாறு தாக்குதல்களை நடாத்தாவிட்டால் தாவூத் குழுவில் இருந்து பிரிந்து சென்றவர்களை ஆதரிக்கப் போவதாகவும், ஐஎஸ்ஐ கூறியுள்ளது என இந்திய உளவுத் துறைக்கு கிடைத்த தகவல்கள் கூறுகின்றன. இந்திய உளவுத் துறை வட்டாரங்கள் இது தொடர்பாகக் கூறியதாவது, தனது அமைப்பில் ஏற்பட்டுள்ள குழப்பத்தைச் சரிசெய்யும் படியும் தாவுத்திடம் ஐஎஸ்ஐ அதிகாரிகள் தாவூத்திடம் கூறியுள்ளனர். பிரபல தாதா சோட்டா ஷக்கீலின் சகோதரர் அன்வரின் தலைமையில் புதிய குழுவை ஐஎஸ்ஐ ஏற்படுத்தியுள்ளது. இக் குழுவில் சையத் முஜாபர் யூசும் கோத்தரவாலா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். தற்போது அன்வர் டுவாயில் இருக்கின்றார். மற்ற இருவரும் தாய்லாந்திலும், பாகிஸ்தானிலும் மாறிமாறி வசித்து வருகின்றனர். தங்கள் திறமையை நிரூபித்துக்காட்ட மும்பையில் இக்குழு தாக்குதல்களை ஏற்பாடு செய்யக் கூடும் எனவும் தகவல்கள் கிடைத்துள்ளன. தற்போது டுபாய் தவிர வேறு வளைகுடாநாட்டிலும் தாவூத் தனது அமைப்பை உருவாக்கியிருப்பதாகத் தகவல்கள் வந்துள்ளன என்றும் கூறியுள்ளது.

# மகாராஷ் டிர தேர்தல் வெற்றியை முன்னிட்டு பொதுச் செயலர்களுக்கு பிரதமர் விருந்து

(புதுடில்லி)

மகாராஷ்டிர சட்டப்பேரவைத் தேர்தல் வெற்றியைக் கொணடாடும் வகையில் அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டியைச் சேர்ந்த அனைத்து பொதுச் செயலர்களுக்கும் மதிய உணவு விருந்தளித்தார். பிரதமர் மன்மோகன்சிங் தனது அரசு இல்லத்தில் இந்த விருந்தை ஞாயிற்றுக்கிழமை மதியம் அளித்தார்.

மகாராஷ்டிர சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி 69 இடங்களைப் பிடித்தது. அதன் கூட்டணிக் கட்சியான தேசியவாத காங்கிரஸ் 71 இடங்களைப் பிடித்தது.

## ஜப்பானில் நிலநடுக்கம்

(டோக்கியோ)

ஜப்பானில் ஞாயிற்றுக்கிழமை இரு தடவை நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் டோக்கியோ மற்றும் கிழக்கு ஜப்பான் பகுதி நகரங்கள் அதிர்ந்தன. நிலநடுக்கத்தின் அளவு 5.6 என ரிக்டர் அளவுமானியில் பதிவானது.

## தமிழீழ மாவட்ட நீதிமன்று–ஜெயபுரம்

வ.ழு.இல:945/2002
பெறுமதி:49500/=
தன்மை:பணம்

வழக்காளி.
திருமதி. செல்வநாயகம்
மனோன்மணி
ஜெயபுரம் தெற்கு
ஜெயபுரம்

எதிர்.
திருமதி.அருணா
தனபாலரட்ணம்
பாடசாலை பின் வீதி,
483,அக்கராயன்,
-எதிராளி.-

மேற்படி எதிராளிக்கு

### முற்றான தீர்வை தொடர்பான பகிரங்க அறிவித்தல்

மேலே பெயர் முகவரியிடப்பட்ட எதிராளியாகிய உமக்கு எதிராக வழக்காளியினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் எதிராளியாகிய நீர் வழக்கு நடவடிக்கைக்கு சமூகம் கொடுக்காமையினால் உமக்கு எதிராக ஒரு முக விளக்கம் இடம்பெற்று அத்தீர்ப்பின் இடைக்காலத்தீர்வை கடந்த 07.01.2004 அன்று பகிரங்கமாகப் பிரசுரிக்கப்பட்டது. எனவே அவ் இடைக்காலத் தீர்வை தகுதியான கால அவகாசத்தின்பின் முற்றான தீர்வை ஆக்கப்படுகின்றது. இதில் ஏதும் ஆட்சேபனைகள் இருப்பின் இப் பிரசுரம் பிரசுரிக்கப்பட்டு 21 நாட்களுக்குள் மன்றில் தோன்றி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர். தவறின் இவ் முற்றான தீர்வையின்பொருட்டு தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்படும் என்பதனை இதன்மூலம் அறியத் தருகின்றோம்.

"மன்றின் கட்டளைப்படி"

வரைபு:
சி.க.அமல் நிக்சன்,
வழக்காளி, சட்டத்தரணி,
மாவட்டமேல்,மேன்முறையீட்டு மன்று
கிளிநொச்சி.

பதிவாளர்.
மாவட்ட நீதிமன்று.
ஜெயபுரம்.

## தமிழீழ மாவட்ட நீதிமன்று–ஜெயபுரம்

வ.ழு.இல:945/2002
பெறுமதி:49500/=
தன்மை:பணம்

வழக்காளி.
திருமதி. செல்வநாயகம்
மனோன்மணி
ஜெயபுரம் தெற்கு
ஜெயபுரம்

எதிர்.
திருமதி.அருணா
தனபாலரட்ணம்
பாடசாலை பின் வீதி,
483,அக்கராயன்,
-எதிராளி.-

### முற்றான தீர்வை

இந்த 2003ஆம் அண்டு சனவரி மாதம் 31ஆம் நாள் இவ்வழக்கு இம்மன்றில் நீதியாளர் திரு.வ. பிரபுராஜ் அவர்கள் முன்னிலையில் கூப்பிடப்பட்ட போது எதிராளி வடபகுதிக்கு வெளியே சென்றுள்ளதன் காரணத்தினால் இவ்வழக்கு 20.02.2003 அன்று ஒருமுக விளக்கத்திற்கு எடுத்ததன் அடிப்படையில் அதாவது வழக்காளி தரப்பால் முன்வைத்த வழக்கு அறிக்கையும் 2ஆம் பந்தியில் குறிப்பிட்ட தன் பிரகாரமும்,வழக்காளியால் இணைத்த -வ1,-வ2இன் அடிப்படையிலும் வழக்கறிக்கையின் முதலாம் மூன்றாம் உரிமைக் கோரிக்கையின் பிரகாரமும் எதிராளியானவர் வழக்காளிக்கு49500/-செலுத்த வேண்டுமென்பதுடன் இம்வழக்கினால் வழக்காளிக்கு ஏற்பட்ட வழக்குச் செலவையும் இறுக்குமாறு ஒருமுகத் தீர்வு வழங்கப்பட்டதன் பிரகாரம் இம் முற்றான தீர்வை பதியப்படுகின்றது.

2004ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 08ஆம் நாள்

வரைபு:
சி.க.அமல் நிக்சன்,
வழக்காளி, சட்டத்தரணி,
மாவட்டமேல்,மேன்முறையீட்டு மன்று
கிளிநொச்சி.

பதிவாளர்.
மாவட்ட நீதிமன்று.
ஜெயபுரம். (5193)

# தன்னம்பிக்கை இழந்துவிடாததே எனது உலக சாதனையின் இரகசியம்



## ஷேன் வோர்ன்

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட் வீழ்த்திய வீரர் என்ற உலக சாதனை இலக்கு, பெங்களூர் டெஸ்ட் போட்டியின் போது எனக்குள் சின்னதாக ஒரு பதற்றத்தை ஏற்படுத்தியிருந்தது என்பது உண்மைதான். இது போன்ற சாதனைகளுக்கு அதிக முக்கியத்துவம் தருவதில்லை. என்றாலும் உள்மனதில் ஒரு ஆர்வம் இருந்ததை மறுப்பதற்கில்லை.

இவ்வாறு அவுஸ்திரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,சென்னையில் சாதித்துவிட்டேன். எனது சாதனை விக்கெட்டுக்கான பிடியை மத்தியூ ஹெய்டன் பிடித்த தருணத்தை நான் சரியாகக் கவனிக்கவில்லை. பிற்பாடு ரீப்ளே, பத்திரிகைகளில்தான் பார்க்க முடிந்தது. இது தனி நபர் சாதனைதான். ஆனாலும் நான் அறிமுகமான காலத்தில் இருந்து என்னுடன் விளையாடிய சக வீரர்கள் அத்தனை பேருக்கும் இந்தச் சாதனையில் பங்குண்டு. குறிப்பாக, எனது தலைவர்கள் அலன் போர்டர், மார்க் டெய்லர், ஸ்ரீவ்வோ, ரிக்கி பொண்டிங், அடம் கில்கிறிஸ்ட் இவர்கள் என் மீது வைத்திருந்த நம்பிக்கை நான் தளர்ந்திருக்கும் நேரங்களில்கூட நம்பிக்கை அளித்து என்னைப் பந்து வீச ஊக்கப்படுத்தியதை மறக்க முடியாது. அவர்கள் நம்பிக்கையை நான் வீணாக்கியதில்லை என்பதைத்தான் மிக மகிழ்சியான விடயமாகக் கருதுகின்றேன். வாழ்க்கையில் ஏற்றங்கள் மட்டுமல்ல, நிறைய இறக்கங்களையும் சந்தித்திருக்கின்றேன். தோல்விகள் என்னைத் தளரவிடவில்லை. காரணம், எந்தச் சூழ்நிலையிலும் தன்னம்பிக்கை இழந்துவிடாத எனது குணம்தான் என் வெற்றியின் இரகசியமும் அதுதான் என்றார்.

# இனவாதக் குற்றச்சாட்டில் இருந்து சிம்பாப்வே கிரிக்கெட் சபைக்கு விடுதலை



சிம்பாப்வே கிரிக்கெட் சபை இனவாத அணுகுமுறை தொடர்பான குற்றச்சாட்டுக்களிலிருந்து சர்வதேச கிரிக்கெட் பேரவையால் விடுவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அணித்தலைவர் ஹீத்ஸ்ரீக்கிற்கு ஆதரவு வழங்கியமைக்காக 15 வெள்ளையின வீரர்கள் அணியில் இருந்து நீக்கப்பட்டதை அடுத்து சர்வதேச கிரிக்கெட் பேரவையால் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது.

ஹீத்ஸ்ரீக் சர்ச்சைக்குரிய வகையில் அணித்தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதுடன் அணியிலிருந்தும் விலக்கப்பட்டார். இது தொடர்பாக விசாரணை நடத்திய சர்வதேச கிரிக்கெட் பேரவையின் இருவரைக் கொண்ட விசாரணைக் குழு சிம்பாப்வே கிரிக்கெட் ஒன்றியத்தில் இனவாதம் கொண்ட எந்த ஆதாரங்களையும் காணவில்லை என சர்வதேச கிரிக்கெட் பேரவை தலைவர் இசான்மானி தெரிவித்துள்ளார்.

பலவீனமான அணியை களமிறக்கியமைக்காக இடை நிறுத்தப்பட்ட சிம்பாப்வேயின் டெஸ்ட் கிரிக்கெட் அந்தஸ்து 2005 ஆம் ஆண்டு மீள நிலைநிறுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சந்தேகத்திற்கு இடமான பந்து வீச்சு; திருத்திக்கொள்ள மாலிக்கிற்கு காலக்கெடு

பாகிஸ்தான் அணியின் சகலதுறை ஆட்டக்காரர் சொகைப் மாலிக்கின் பந்து வீச்சு முறை சந்கேத்திற்கு இடமானது என்று சர்வதேச கிரிக்கெட் சபை குற்றம் சாட்டியுள்ளது. பாக்டெல் கிண்ண இறுதிப் போட்டியில் சிறிலங்கா அணியுடன் இடம்பெற்ற போட்டியில் மாலிக்கின் பந்து வீச்சு முறையை நடுவர்கள் அவதானித்தனர். இதன்படி இந்தப் பந்துவீச்சு முறையை திருத்திக்கொள்வதற்கு மாலிக்கிற்கு சர்வதேச கிரிக்கெட் சபை ஆறு மாத கால அவகாசம் வழங்கியுள்ளது.

## மூன்றாவது டெஸ்ட் போட்டி பதானுக்கு பதில் நெய்ரா



சதைப்பிடிப்புக் காரணமாக அவதிப்பட்டுவரும் இந்திய அணியின் வேகப் பந்துவீச்சாளர் இர்பான் பதானுக்குப் பதிலாக ஆஸிஸ் நெய்ரா இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார். இதனால் 3ஆவது டெஸ்ட் போட்டியில் பதான் விளையாடமாட்டார்.

இத்தகவலை இந்திய அணியின் கிரிக்கெட் தேர்வாளர்கள் அறிவித்துள்ளனர்.

அத்துடன் தொடர்ச்சியாக உபாதை காரணமாக இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடாதிருந்த நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரும் 3ஆவது போட்டியில் இணைக்கப்பட்டுள்ளார்.



விளையாட்டு

# சமநிலையில் முடிவடைந்த சென்னை டெஸ்ட்

# அவுஸ்திரேலியாவை காப்பாற்றியது மழை



இந்தியாவுக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணிக்கும் இந்திய அணிக்கும் இடையில் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளது.

இறுதி நாளான நேற்று மைதானத்தில் நிலவிய சீரற்ற காலநிலை போட்டி தொடர முடியாத நிலை ஏற்பட்டு முற்றாகக் கைவிடப்பட்டது.

இது இந்தியாவின்வெற்றி வாய்ப்புக்கு கிடைத்த ஏமாற்றமாக அமைந்ததுடன் அடுத்துவரும் டெஸ்ட் போட்டிகளில் இந்தியா மீண்டும் போராட வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இறுதி நாளான நேற்று 210 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் கைவசம் 10 விக்கெட்டுடன் இருந்த இந்தியாவிற்கு ஒரு நாள் எஞ்சி யிருந்த போதும் சீரற்ற கால நிலை ஏற்பட்டது துரதிஷ்டமே.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக அனில் கும்ளே தெரிவு செய்யப்பட்டார்.

இதன் மூலம் நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலியா 1-0 என்ற நிலையில் முன்னணி வகிக்கிறது.

இப்போட்டி முடிவு குறித்து கருத்து தெரிவித்த அவுஸ். அணித் தலைவர் கில்கிறிஸ்ட் தமக்கு ஏமாற்றமளித்துவிட்டதாகத் தெரிவித்துள்ளார்.



# மீண்டும் இங்கிலாந்து அணித் தலைவராக டேவிட் பெக்காம் வருவதையே விரும்புகிறேன்



## பயிற்சியாளர் எரிக்சன்

றியல் மெட்ரிக் கழக வீரர்களின் நம்பிக்கையை இழந்திருப்பினும், நட்சத்திர கால்பாந்தாட்ட வீரர் டேவிட் பெக்காம் மீண்டும் இங்கிலாந்து அணித் தலைவராக வருவதை தான் விரும்புவதாக பயிற்சியாளர் எரிக்சன் தெரிவித்துள்ளார். வேல்ஸ் அணியில் பெக்காம் முன் யோசனையுடனேயே ஒப்பந்தம் செய்திருப்பதாக கூறும் அவர் நீண்ட காலம் அங்கு இருக்கமாட்டார் என்றார். இங்கிலாந்து தேசிய பத்திரிகை ஒன்றுக்கு அவர் பேட்டியளித்தார். அப்போது பெக்காம் நடுவர்களுடன் புரிந்துணர்வுடன் நடந்து கொள்வதாகக் கூறினார்.

கடந்த எட்டு மாதங்களாக தடை செய்யப்பட்ட ஊக்க மருந்து பாவனைக் குற்றத்துக்காக தடைவிதிக்கப்பட்ட மஞ்செஸ்ரர் அணி வீரர் றியோ பர்டினன்ட் அணிக்குத் திரும்பியிருப்பது மகிழ்ச்சியளிப்பதாகக் குறிப்பிட்ட எரிக்சன் பர்டினட் சிறந்த ஆட்டக்காரர் என்றார். அவர் இங்கிலாந்து அணியின் போக்கையும் மாற்றக் கூடியவர் என்றும், ஐரோப்பிய கிண்ணத்தில் செய்ததைப் போல் விளையாடுவார் என்றும் தாம் பயிற்றுவித்த வீரர்களுள் அவரும் ஒருவர் என்றும் தெரிவித்துள்ளார்.

# பீஜிங் மரதன் போட்டி; சன் இங்ஜி சம்பியன்




சீனாவில் பீஜிங் மரதன் போட்டி நேற்று முன்தினம் நடந்தது. இதில் ஒன்பது நாடுகளைச் சேர்ந்த முன்னணி தடகள வீர, வீராங்கனைகள் பலரும் கலந்து கொண்டனர். சுமார் 42 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இப்போட்டியில் பெண்கள் பிரிவில் சீனாவின் சன் இங்ஜி சம்பியன் பட்டம் வென்றார். இவர் போட்டித் தூரத்தை 2 மணி 24 நிமிடம் 11 வினாடிகளில் கடந்து தங்கத்தைக் கைப்பற்றினார். சமீபத்தில் டில்லிடியில் நடந்த உலக அரை மரதன் போட்டியிலும் இவர் பட்டம் வென்றது குறிப்பிடத்தக்கது.

இரண்டு மற்றும் மூன்றாவது இடத்தையும் சீனா வீராங்கனைகளே கைப்பற்றினர். ஜியோ சன்சியா 2 மணி 28. 42 வினாடிகளில் கடந்து வெள்ளியும், தாய்யன்யன் 2 மணி 29. 58 வினாடிகளில் கடந்து வெண்கலமும் வென்றனர். ஆண்கள் பிரிவில் கென்யாவின் ஜேம்ஸ் மாய்பென் 2. மணி 10.42 வினாடிகளில் கடந்து தங்கம் வென்றார். தான்சானியாவின் கிறிஸ் டோபர் ஐசெக்வி 2 மணி 10.59 வினாடிகளில் வெள்ளியும், தென்கொரியாவின் ரி கயோங் 2 மணி 15.24 வினாடிகளில் கடந்து வெண்கலமும் வென்றனர்.

# கிராண்ட் ஸ்லாம் வீரர்கள் பங்கேற்கும் செஸ் ஒலிம்பியாட் இந்தியா ஆதிக்கம்

ஸ்பெயினில் உள்ள மன்லோர்கா நகரில் முன்னணி கிராண்ட் ஸ்லாம் வீரர், வீராங்கனைகள் பங்கேற்கும் உலக செஸ் ஒலிம்பியாட் தொடர் நடக்கிறது. இரண்டாவது சுற்றுப் போட்டிகள் நேற்று முன்தினம் நடந்தது. ஆண்கள் பிரிவில் இந்திய அணி கோஸ்டாரிகோவைச் சந்தித்தது. முதல் சுற்றில் பங்கேற்காத இந்திய நட்சத்திர வீரர் விஸ்வநாதன் ஆனந்த், சூரியசேகா, கங்குலி இரண்டாவது சுற்றில் விளையாடினர் முழுப் பலத் டன் களமிறங்கிய இந்திய அணி 3.5, 0.5 என்ற புள்ளி கணக்கி ல் அபார வெற்றி பெற்றது. சகிகிரண், ஹரி கிருஸ்ணா. இத்தொடரில் தங்கள் முதல் வெற்றியை பதிவு செய்து கொண்டனர். அனுபவ வீரர் ஆனந்த் எளிதில் வெற்றி பெற்றார். இதன் மூலம் இந்திய அணி இரண்டு சுற்றுகள் முடிவில் 6 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது. முதல் இடத்தில் அதிகபட்சமாக 8 புள்ளிகளுடன் உக்ரைன் மற்றும் செக்குடியரசு அணிகள் உள்ளன. பெண்கள் பிரிவிலும் இந்தியாவுக்கு வெற்றியே கிடைத்தது. கியூபா அணியை இந்திய வீராங்கனைகள் 2.5, 0.5 என்ற புள்ளிக் கணக்கில் வீழ்த்தினர். இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி 6 புள்ளிகளுடன் முதல் இடத்தைப் பிடித்தது. இந்தியாவுடன் ஜேர்மனி, கஜகஸ்தான் மற்றும் லாத் வியா அணிகளும் 6 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளன.

# கிரம்ளின் டென்னிஸ் மிஸ்கினா சம்பியன் இறுதிப் போட்டியில் பூபதி ஜோடி



ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் கிரம்ளின் கோப்பை டென்னிஸ் தொடர் நடக்கின்றது. பெண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடந்தது. ரஷ்யாவின் மிஸ்கினா, சக நாட்டு வீராங்கனையான எலினா டெமன்டிவாவை எதிர்த்து விளையாடினார். விறுவிறுப்பாக நடந்த இப் போட்டியில் மிஸ்கினா 7-5, 6-0 என்ற நேர் செட்களில் டெமன்டிவாவை வீழ்த்தி கோப்பையைக் கைப்பற்றினார். ஆண்கள் இரட்டையர் பிரிவு அரையிறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடந்தது. இந்தியாவின் மகேஸ் பூபதி, சுவீடனின் ஜோனஸ் பிஜோர் க்மேன் ஜோடி சிம்பாவ்வேயின் வெய்னி பிளாக் கெவின் உலியட் ஜோடியை சந்தித்தது. இதில் பூபதி ஜோடி, 6-2, 7-6 என்ற செட்களில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

# சம்பியன்

நைஜீரியாவின் லாகோஸ் நகரில் முன்னணி வீராங்கனைகள் பங்கேற்கும் சர்வதேச டென்னிஸ் சம்பியன் ஸிப் போட்டிகள் நடந்தன. நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் இந்தியாவின் சானியா மிர்சா, தென்னாபிரிக்காவின் சானெலி பியர்ஸ் மோதினர். சானியா மிர்சா 4-6, 7-6, 7-5 என்ற செட்களில் பியர்ஸை போராடி வீழ்த்தினார். சம்பியன் பட்டமும் வென்றார். கடந்த இரு வாரங்களில் சானியா கைப்பற்றும் இரண்டாவது டென்னிஸ் பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.



சிந்தனைக்கு

இலட்சியத்தால் ஒன்று பட்டு எழுச்சி கொண்ட மக்களை எந்த ஒரு சக்தியாலும் ஒடுக்கி விடமுடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 19-10-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## சமாதானத்திற்கு ஏற்ற வழியல்ல!

யுத்தத்தைப் போல் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்துதல்முடியாது. யுத்தத்திற்கு இரகசியம் பேணுதல், தந்திரம், துணிவு, பிரச்சாரம் என்பவை முக்கியமானவையாகலாம். ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு அவை முக்கியமானவையல்ல. சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு அர்ப்பணிப்பு, நேர்மை, வாக்குறுதி மாறாமை போன்ற உயர் பண்புகள் முக்கியமானவையாகும்.

ஆனால், சனாதிபதி சந்திரிகா தரப்பிலோ இவைகள் காணப்படுவதாக இல்லை. பொய்ப்பிரச்சாரத்தின் மூலம் சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் நடத்திவிடலாம் என எண்ணுவது போல் தெரிகின்றது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவியேற்றுச் சுமார் ஆறுமாதகாலமாக இத்தகையதொரு நிலை தொடர்வதாகவே தெரிகின்றது.

இந்த வகையில், இறுதியாக அரச தரப்பில் அறிவிப்புச் செய்யப்பட்டதே அரசாங்கம் தயாரித்துள்ள மாற்றுயோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விடுதலைப்புலிகள் இயக்கம் சம்மதம் தெரிவித்துள்ளது என்பதாகும். இது தொடர்பாக ஆராயவும், பேச்சுவார்த்தைக்கான திகதியினைத் தீர்மானிப்பதற்காகவும் நோர்வே ஏற்பாட்டாளர்கள் விரைவில் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர் என்பதும் ஆகும்.

அரசதரப்பின் இத்தகவலானது உண்மைக்குமாறானது என்பதைச் சிறிது சிந்திப்பவர்கள் புலிகள் இயக்கம் மறுப்புத் தெரிவிக்கும் முன்பதாகவே புரிந்துகொண்டிருப்பர். ஏனெனில் விடுதலைப்புலிகள் நேரத்திற்கு நேரம் மாறுபாடாகப் பேசுபவர்கள் அல்ல என்பதோடு, இடைக்கால நிர்வாகசபை தொடர்பான விடயத்தில் தமது உறுதியான நிலைப்பாட்டை உறுதிபடத் தெளிவாகப் பலதடவை வலியுறுத்தியும் கூறியுள்ளனர்.

அவ்வாறு இருந்தும், சிறிலங்கா அரசாங்கம் இத்தகையதொரு அறிவிப்பை வெளியிட்டமையானது புலிகளை அழுத்தத்தின் மூலம் சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவந்துவிடலாம். அன்றி விடுதலைப்புலிகள் முன்னுக்குப்பின் முரண்பாடாகப் பேசுகின்றார்கள் என்ற பிரச்சாரத்தின் ஊடாக அரசியல் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற நோக்கிலானதாக இருந்திருக்கலாம்.

விடுதலைப்புலிகளின் அரசியல் குழு தற்பொழுது மேற்கொண்டிருக்கும் ஐரோப்பிய சுற்றுப்பயணம் தொடர்பாக தகவல் வெளியிடும் அரச கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்கள் பேச்சுவார்த்தைக்குச் செல்லுமாறு புலிகள் மீது சர்வதேச ரீதியில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்ற என்ற ஒரே கோணத்தில் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. அதாவது விடுதலைப்புலிகளைச் சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்குச் செல்லுமாறு பலநாடுகளும், அமைப்புக்களும் வற்புறுத்தியுள்ளதென்பதோடு மனித உரிமை அமைப்புக்கள் புலிகள் மீது கடும் கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றன என்பதாக அச்செய்திகள் அமைந்துள்ளன.

ஐரோப்பிய நாடுகளும் சரி, உலகின் வேறுபல நாடுகளும் சரி விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்குச் செல்லவேண்டும் எனக்கோரி வருவது ஒன்றும் புதியதல்ல. யுத்த நிறுத்த உடன்பாடு கைச்சாத்தாகும் முன்பிருந்தே இத்தகைய கோரிக்கையை அவை முன்வைத்தே வந்துள்ளன. ஆனால் இது தனியாக விடுதலைப்புலிகளிடம் மட்டும் அவைவிடுக்கும் கோரிக்கையல்ல. சிறிலங்கா அரசிடமும் வலியுறுத்திவரும் கோரிக்கைகள் ஆகும்.

ஒருவகையில் பார்க்கப்போனால் விடுதலைப்புலிகளை விட அரசாங்கம் மீதே இது தொடர்பான அழுத்தம் அதிகம் உள்ளது. அவ்வாறு இல்லாதுவிடில், டோக்கியோ மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட நிதியுதவியினை இந்நாடுகள் சிறிலங்கா அரசிற்கு வழங்கியிருப்பதற்கான வாய்ப்புக்கள் உண்டு. ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் பட்சத்திலேயே நிதியுதவி கிடைக்கும் என்ற நிலைப்பாடு அரசின் மீதான அழுத்தம் அல்லாது வேறு என்னவாக இருக்க முடியும்?.

அதுமட்டுமல்ல, விடுதலைப்புலிகள் மீது மனித உரிமை அமைப்புக்கள் பலத்த கண்டனத்தைத் தெரிவிப்பதாகக் கூறிக்கொள்வதிலும் நியாயம் இருப்பதாக இல்லை. விடுதலைப் புலிகள இயக்கம் வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் அமைப்பினரை ஜெனீவா நகருக்கு அழைத்துச் சென்றமையே மனிதவுரிமைகள் தொடர்பாகத் தம்மீது வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு முகம் கொடுக்கமுடியும், பதிலளிக்க முடியும்என்ற நம்பிக்கையின் அடிப்படையிலுமே ஆகும். அதுமட்டுமல்ல இவர்களின் விஜயம் மனித உரிமைகள் குறித்து புலிகள் அக்கறை/ கவனம் செலுத்தியுள்ளனர் என்ற நோக்கில் பார்க்கத்தக்க தேயொழிய புலிகள் மீது கண்டனம் செய்ய வழங்கப்பட்ட சந்தர்ப்பமாக இதனைப் பிரச்சாரப்படுத்துவது அர்த்தமற்றதொன்றாகும்.

ஆனால் சிறிலங்கா அரசாங்கமோ இவற்றை மறந்து விடுதலைப் புலிகள் முரண்பாடாகப் பேசுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டின் மூலம் ஆதாயம் தேட முனைவது போலுள்ளது. அதாவது சமாதான வழிமுறைக்குப் பொருந்தாத சூழ்ச்சி, பொய்ப் பிரச்சாரம் என்பவற்றை அதற்குப் பயன்படுத்தப் பார்க்கின்றது.

ஆனால் இவற்றிற்கெல்லாம் வளைந்து கொடுத்துவிட ஆனந்த சங்கரிபோன்றோ, டக்ளஸ் தேவானந்தாபோன்றோ எச்சில் இலைகளுக்குக் கையேந்தி நிற்பவர்கள் அல்ல புலிகள். சுயகௌரவத்துடன் தமது உரிமைகளை வென்றெடுக்கும் உறுதி புலிகளிடம் உண்டு. சமாதான வழிமுறைகளில் பொய்ப்பிரச்சாரம் பகலில் ஒன்று இரவில் ஒன்று பேசுதல் போன்ற கேவலமான வழிமுறைகளால் அரசாங்கம் ஏதாவது சாதிக்க முடியும் எனக்கருதினால் அதில் நட்டமடையப் போவது அரசாங்கமாகவே இருக்கும்.

# வடக்குக் கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள்

# ஒருமித்துத்தான் வாழவேண்டியவர்களாக உள்ளனர்

### -புல்மோட்டை அரசியல் விழிப்புணர்வுக்கருத்தரங்கில்- எழிலன்

(திருகோணமலை)

"தமிழ்த் தேசியப்பிரச்சினைக்கு ஏதோ ஒருவகையில் தீர்வுவரத் தான் போகின்றது. அவ்வாறான தீர்வு சமாதானப் பேச்சுவார்த்தை மூலமாக இருக்கலாம். அல்லது வேறு வழியாகவும் இருக்கலாம் எவ்வாறான தீர்வு வந்தாலும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம்கள் ஒருமித்துத்தான் வாழவேண்டியவர்களாக இருக்கின்றார்கள்" விடுதலைப்புலிகள் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. எழிலன் புல் மோட்டையில் முஸ்லிம் மக்கள் மத்தியில் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரண்டாம் நாள் அரசியல் விழிப்புணர்வு இயக்கத்தின் கருத்தரங்கு புல்மோட்டையில் ஞாயிறு இடம் பெற்றது. கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதில்பங்கு பற்றினர். கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரு குழுக்காளாகப் பிரிந்து திருமலையின் வடக்குப்பகுதி- கொக்குளாய் ஏரியிலிருந்து புல்மோட்டை, திரியாய், கல்லம்பத்து, குச்சாவெளி, கும்புறுபிட்டி, நிலாவெளி, சாமபல்தீவு, சல்லி ஆகிய கிராமங்களுக்கு விஜயம் செய்தனர். மக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தனர். கருத்தரங்குகளையும் நடத்தினர். நள்ளிரவுவரை தொடர்ந்து (புல்மோட்டையில் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன் பேசும் போது தமிழ், முஸ்லிம் மக்கள் தங்களுக்குள் உள்ள முரண்பாடுகளை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளமுன் வரவேண்டும் என்று கூறினார். கூட்டமைப்புப் பாராளுமன்ற குழுத்தலைவர் இரா.சம்பந்தன் பேசும் போது தமிழ் மக்கள், விடுதலைப்புலிகள்,கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருமே இன்று பொறுமையிழந்து போயுள்ளனர். இனியும் பொறுமையைச் சோதிக்காது அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான தனது தளம்பல் நிலையை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று தெரிவித்தார். ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் பேசினர்.

(25)

# திருமறைக் கலாமன்றத்தினால் இளையோர் சமாதானப் பாசறை

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா திருமறைக் கலா மன்றத்தின் ஏற்பாட்டில் வவுனியாவில் இளையோர் சமாதானப் பாசறை நிகழ்வு நடைபெற்றுள்ளது, இறம்பைக்குளம் புனித அந்தோனியார் தேவாலய மண்டபத்தில் நடைபெற்ற இந் நிகழ்விற்குத் திருமறைக் கலாமன்றச் செயலாளா திரு. ஜெகன் தலைமை தாங்கினார். இதில் "இந்து சமயத்தில் சமாதானம்" என்ற தலைப்பில் குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ. கந்தசாமிக் குருக்கள் அவர்களும், "அண்ணல நபி காட்டிய ஒற்றுமையும் சமாதானமும் " என்ற தலைப்பில் வவுனியா நகரப் பள்ளிவாசல் மௌலவி சபீக் அவர்களும் "சமயங்களும் சமாதானமும்'' என்ற தலைப்பில் வவுனியா தூய ஆவியானவர் ஆலயப் போதகர் செல்வன் அவர்களும் "இலக்கியம் பேசும் இன ஐக்கியம்"என்ற தலைபபில் தமிழ் மணி அகளங்கன் அவர்களும் "சமாதான முயற்சிகளும் நாங்களும் " என்ற தலைப்பில் வவுனியா மாவட்ட மகளிர் அரசியல் துறை பொறுப்பாளர்செல்வி. அலை அவர்களும் "சமாதானம் நோக்கிய பத்திரிகையின் பணிகள்" என்ற தலைப்பில் ஐ.பி.சி.செய்தியாளர் திரு.கன கரவி அவர்களும் சிறப்புரை ஆற்றினர் இதில் இந்து, கிறிஸ்தவ சமயங்களைச் சார்ந்த பல இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர்.

(10)

# பெண் ஒருவரால் கடியுண்ட கான்ஸ்டபிள் வைத்தியசாலையில்

(கொழும்பு)

பெண்ணொருவரால் கடிக்கப் பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

சிறிலங்காவில் யட்டவத்த பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இப் பொலிஸ் கான்ஸ்ப்பிள் சென்ற வியாழன் வீதியில் சென்று கொண்டிருந்த போது தனது மகன், மகள்,மருமகள் சகிதம் இவரைப் பின் தொடர்ந்த குறித்த பெண் "எனது கணவரைக் கொன்றவர்களில் நீயும் ஒருவன் தானே" எனக் கேட்டவாறு பலமாகத் தாக்கிய பின் இக் கான்ஸ்டபிளின் கையில் பலமாக கடித்து விட்டாராம் இதனால் காயம் அடைந்த பெரேரா என்ற இப் பொலிஸ் கான்ஸ்டபிள் மாத்தளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளாராம்

தற்போது பொலிசாரால் கைதாகி தடுப்புக் காவலில் இருக்கும் பெண்மணியின் கணவர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பின் விடுவிக்கப்பட்டு வீடு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்றும் ஒருவருடத்திற்கு முன் நடந்த இச்சம்பவத்திற்கு தற்போது மனைவி பழிவாங்க எண்ணியுள்ளார் என்றும் பொலிசார் கூறியுள்ளனர்.

# 2600 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும்

### -கல்வி அமைச்சின் செயலர் தாராடிமெல்

(திருகோணமலை)

இவ்வருடத்தில் நாட்டில் உள்ள சுமார் 2600 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும். இவர்களில் சுமார் 750 பேர் வடக்குக் கிழக்கு பாடசாலைகளில் நியமனம் பெறுவர். இதற்கான அங்கீகாரம் அமைச்சரவையிடம் பெறப்படும். இவ்வாறு கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் தாராடிமெல் தெரிவித்தார். வடக்குக் கிழக்கு மாகாணத்தில் இலங்கைக்கல்வி நிர்வாகசேவை ஆளணியில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கென நடத்தப்பட்ட விசேட பரீட்சையும் தேசியமட்டத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேசியமட்டத்தில் நடத்தப்பட்ட பரீட்சையும் சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் இரத்துச்செய்யப்பட்டு விட்டதாகவும் இதற்காக விரைவில் ஒரேஒரு பரீட்சை மட்டுமே தேசிய மட்டத்தில் நடத்தப்படும் என்றும் தாராடிமெல் கூறினார்.

இப்பரீட்சைக்கான அரசாங்க வர்த்தகமானி அறிவித்தலில் வடக்குக் கிழக்கு கூடுதலாக கல்விநிர்வாக சேவை ஆளணியினரைத் தெரிவு செய்யக்கூடிய விதத்தில் இடமளிக்க வேண்டும் என்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினரின் கோரிக்கை அப்போது கவனத்தில் எடுக்கப்படும் என்றும் தாராடிமெல் தெரிவித்தார். கடந்த வியாழக் கிழமை கொழும்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தூதுக்குழுவைச் சந்தித்துப்பேசிய போதே கல்வி அமைச்சின் செயலாளர்தாராடிமெல் இத்தகவல்களை வெளியிட்டார்.

(25)

# மதுபான நிலையம் உடைத்து

# பணம், மதுபானம் திருட்டு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா வசந்தி திரையரங்க கட்டடத்திலுள்ள மதுபான நிலையம் கடந்த சனிக்கிழமை திருடர்களால் உடைக்கப்பட்டுள்ளது. இந் நிலையத்தினுள் இருந்த 45.000 ரூபா பணமும் உயர் ரக மதுபானங்களும் திருடப் பட்டுள்ளதாக வவுனியாப் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. திருடர்களைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் வவுனியாப் பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.

(10)

## நிமலராஜன் படுகொலை

# சூத்திரதாரிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தக்கோரி

# யாழ்.இல் ஊடகவியலாளர்கள் இன்று போராட்டம்!

(யாழ்ப்பாணம)

ஊடக வியலாளர் நிமலராஜன் படுகொலைச் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனைகள் வழங்குமாறு கோரியும் மற்றும் வட-கிழக்கில் ஊடகவியலாளர்கள் மீதான கொலைகள் மற்றும் அச்சுறுத்தல்களைக் கண்டித்தும் அடையாள எதிர்ப்புப் போராட்ட மொன்றை யாழ்ப்பாண பத்திரிகையாளர்கள் இன்று நடாத்தி வுள்ளனர்

யாழ் மத்திய பேருந்துப் பகுதியில் நண்பகல் 12 மணி முதல் பிறபகல் 1.00 மணிவரையான நேரம் இவ்வெதிர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பாக ஊடகவியலாளர் நிமலராஜன் ஞாபகார்த்த அமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் நான்கு வருடங்கள் பூர்த்தியாகின்றது.ஆயினும் இன்று வரை குற்றவாளிகள் சட்டத்தின் முன் தண்டிக்கப்படாமலும் சட்டமா அதிபரது பணிப்பிற்காக காத்திருப்பதாகவும் கூறி ஏதேதோ காரணங்களால் விசாரணைகள்இது வரை முடிவெதனையும் கண்டிருக்கவில்லை இத்தகையசூழலில் வடக்கு-கிழக்கில் ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்களும், படுகொலைகளும் மீண்டும் பெருமளவில் அதிகரித்து வருகின்றது. கிழக்கில் ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின்படு கொலைச் சம்பவமும் அத்துடன் அங்குள்ள ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்களும் இதற்கு நல்லதோர் உதாரணம்.

இந்நிலையில் ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் நினைவு தினமாக இன்று நிமலராஜன் கொலை சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை வழங்குமாறு கோரியும் வட-கிழக்கில் ஊடகவியலாளார்கள் மீதான கொலைகள் மற்றும் அச்சுறுத்தல் களைக் கண்டித்தும் அடையாள எதிர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுக்கத் தாம் முடிவு செய்துள்ளார்.

இன்று நண்பகல் 12.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை யாழ். மத்திய பேருந்து நிலையத்தின் முன்பாக இடம் பெறவுள்ள இவ் எதிர்ப்புப் போராட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அழைப்புவிடுக்கின்றோம் என்றும் யாழ். பத்திரிகையாளர் கூறியுள்ளனர். (27,33)

# பொலிஸ்மா அதிபர் யாழ். விஜயம்

# கண்காணிப்புக் குழுவையும் சந்தித்தார்

(யாழ்ப்பாணம்)

புதிய பொலிஸ்மாஅதிபராகப்பதவியேற்றுள்ள சந்திரா பெர்னாண்டோ ஒரு நாள் விஜயமொக நேற்று யாழ் வருகை தந்துள்ளார். விமானப் படையின் விமான மூலம் பலாலியை நேற்றுக் காலை 9.00 மணியளவில் வந்தடைந்த அவர் முன்னதாக காங்கேசன் துறையிலுள்ள பிராந்தியப் பொலிஸ் தலைமையகத்திற்கு வருகை தந்திருந்தார். அங்கு வைத்து யாழ். மாவட்ட பொலிஸ் நிலையங்களினது பொறுப்பதிகாரிகள் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளைச் சந்தித்து அவர் பேச்சுக்களை நடாத்தியிருந்தார்.

குறிப்பாக குடாநாட்டில் சட்டம் ஒழுங்கைப் பேணுவதில் எதிர் கொள்ளப்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்ட அவர் தேவையான தமிழ் மொழி தெரிந்த பொலிசாரை மேலும் சேவையிலீடுபடுத்த நடவடிக்கை எடுப்பதாகப் புதிய பொலிஸ்மா அதிபர் உறுதி வழங்கியிருந்ததாகவும் சந்திப்பில் கலந்து கொண்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதனிடையே இன்று பிற்பகல் ஒரு மணியளவில் யாழ். நகரப் பகுதிக்கு விஜயம் செய்த அவர் நல்லூர் கோவில் வீதியிலுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்திற்கும் விஜயம் செய்திருந்தார். அங்கு சுமார் இருபது நிமிடங்களிற்கு மேலாக கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார். இப் பேச்சுக்களின் போது வெளியார் எவரும் ஆஜராகியிருக்க அனுமதிக் கப்படவில்லை.

இச் சந்திப்புத் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த கண்காணிப்புக் குழு வட்டாரங்கள் இச் சந்திப்பு பொலிஸ் திணைக்களத்தினது கோரிக்கையின் பேரிலேயே இடம் பெற்றதாக தெரிவித்ததுடன் மேலதிக தகவல்களை வெளியிட மறுத்துவிட்டன. பின்னர் ஆரியகுளம் நாக விகாரைக்குச் சென்று மத வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் மீண்டும் பலாலியூடாக அவர் கொழும்பு திரும்பினார். இதனிடையே அவரது விஜயத்தை முன்னிட்டு யாழ். நகரப்பகுதியில் மேலதிக பொலிசார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (27,33)

## வட்டுமடு...

வினோ ஆகியோரும், முஸ்லிம் விவசாயிகள் தரப்பில் எம்.ஏ.அப்துல் காதர், ஐ.எம்.இப்ராகீம் மற்றும் எம்.அகமது லெப்பை ஆகியோரும் கலந்து கொண்டனர். நேற்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் படி தற்காலிகமாக 300 ஏக்கரில் பெரும்போக வேளாண்மைச் செய்கைக்கு அனுமதியளிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இக்கூட்டத்தில் கலந்து கொண்ட விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவித்தார். 3 மாத காலத்திற்குள் சகல ஆவணங்களும் காணி ஆணையாளரினால் பரிசீலிக்கப்பட்டு தகுதியானவர்களுக்கு மேய்ச்சல் தரைக்கு ஒதுக்கப்பட்ட காணிக்கு அப்பால் வேறு இடத்தில் காணி வழங்குவது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.


பாராட்டி வாழ்த்துகின்றோம்



தேவிபுரம் சந்தி சன்னதி முருகன் வெதுப்பகம் ஸ்ரீசுதன்-மஞ்சுளா தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வனும் யா/மத்திய கல்லூரி மாணவனுமாகிய

செல்வன்

ஸ்ரீசுதன் சுஜேன்

2004 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 130 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காகப் பாராட்டி வாழ்த்துவதோடு, இது போன்ற பல சாதனைகள் படைத்திடவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கண்ணன் மருத்துவநிலையம்,
தேவிபுரம் சந்தி,

DR. வடிவேல் குடும்பம்,
மருத்துவ நிலையப் பணியாளர்கள்.

(சி-10505)


# கொழும்பில் இருவர் பலி

(கொழும்பு)

இனம் தெரியாதோரினால் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி கிராண்பாஸ் பகுதியில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இவர்கள் போதைப் பொருள் கடத்தலுடன் சம்பந்தப்பட்டவர்களெனப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## புதுமண...

வந்த கொண்டிருந்த எல்வ்(டபிள்கப்) வாகனமும் விபத்துக்குள்ளாகின.. இதன் போது திருமணத் தம்பதிகள் பயணித்த கையஸ் வாகனம் வீதியில் இருந்து இரண்டு தடவைகள் தடம் புரண்டு வீதியில் இருந்து சில மீற்றர் தூரம் வரை சென்றிருந்தது.

இதன் போது கையஸ் வாகனத்தில் 12 பேர் பயணித்தனர். இவர்களில் மணமகன், மணமகள் ஆகியோரின் தாய், தந்தையர்கள் உட்பட ஐவர் காயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு நால்வர் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளனர். மணமகனின் தந்தையாரான வள்ளிபுனத்தைச் சேர்ந்த மாணிக்கம் சின்னத்தம்பி (வயது - 63) என்பவர் வைத்திய சாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகிறார்.

மேற்படி விபத்தில் சிக்கிய கையஸ் வாகனம் மோசமாகச் சேதமடைந்துள்ளது. கையஸ் வாகனத்தின் கண்ணாடிகள் சிதைவடைந்ததுடன் அதன் இருக்கைகள் அனைத்தும் பிடுங்கப்பட்டிருந்தது. வாகனத்தின் தோற்றம் முற்றாக சேதமடைந்து சின்னாபின்னமாகிக் காணப்பட்டது. இதேவேளை விபத்தில் சிக்கிய எல்வ் வாகனத்தின் முன் பகுதி சிறு சேதத்திக்குள்ளாகி உள்ளது.

மேற்படி விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை தமிழீழ காவல் துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.(லோ,14)



புதுக்குடியிருப்பிலிருந்து பரந்தன் நோக்கி வந்து கொண்டிருந்த ஹையஸ் வாகனம் நேற்று மாலை 3.00 மணியளவில் வீதியை விட்டுவிலகி விசுவமடு - தேராவில் குளத்திற்குள் பாய்ந்தது .இதில் பயணித்த வர்களுக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (படம் - செல்வா)

# நியமனக் கடிதங்களை பெற்றுக் கொள்க

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பெற்ற 100 வேலையற்ற பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மேற்படி தெரிவு செய்யப்பெற்ற வேலையற்ற பட்டதாரிகள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஸ்தாபனக்கிளைக்கு நேரில் சமுகங்கொடுத்துத் தங்களுக்குரிய நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்கள் வேண்டியுள்ளதுடன். இவர்களுக்கான பயிற்சி நெறி இம்மாதம் 21ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளதெனவும் தெரிவித்துள்ளார்.(சோ)

## சமாதான...

தொடர்ந்து அங்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக தெரிவிக்கப்படும் எதிர்ப்புக்களைக் கைவிட்டு சமாதானப் பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அரசாங்கத்துடன் மக்கள் விடுதலை முன்னணியும் கைகோர்த்து செயற்பட வேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதிர் கட்சித் தலைவர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் இவை தெரிவிக்கப்படடுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போ...

என்ன செய்வதென்று தெரியாமல் எதிரிகள் கலங்கிப் போயுள்ளார்கள் என்றும் குறிப்பிட்ட அவர், இப்போதுள்ள அரசியல் சூழ்நிலை பற்றியும், நாட்டின் தேவைகள் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார்.

இந்த நிகழ்வில் உணர்வு பூர்வமான உரையொன்றை ஆற்றிய புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன், ஊடகங்கள் வாயிலாக புலம்பெயர்ந்த மக்களின்உணர்வுகளைச்சிதைப்பதற்கு மேற்கொள்ளப்படும் சதி முயற்சி பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார்.

மூவாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில், தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் பன்முக ஆற்றலையும், நுண்மதித்திறனையும் வெளிப்படுத்தும் "காலத்தை வென்றவன்" என்னும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

## ஏறாவூரில்...

தொடரூந்தில் பயணம் செய்யவிருந்த சமயம் கைது செய்யப்பட்ட இவர், இன்று மட்டக்களப்பு நீதவானால் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார். எதிர்வரும் முதலாம் திகதி வரை இந்த நபரை விளக்க மறியலில் வைப்பதற்கான உத்தரவை நீதிபதி ஏ.எச்.எம். அஜ்மீர் பிறப்பித்தார்.

## பலமுனை...

கான முன் படியாகவ்வும் பார்க்கப்படக்கூடாது.

உரியகாலத்தில்தொடங்கப்படும் அர்த்தமுள்ள பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் எமது மக்களின் மனிதாபிமான தேவைகளை நிறைவேற்றக் கூடிய இடைக்கால இயந்திர நிறுவனம் என்ற அடிப்படையிலானதே எமது திட்டவரைபாகும்.

இத்திட்ட வரைபின் அடிப்படையில் பேச்சுக்களை மீளத் தொடங்குவதற்கு அரசாங்கம் துணிகரமான நகர்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்மேலும் தெரிவித்தார். இக்கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த ஹேறிப் ஜோவான்கீன் போர்நிறுத்த உடன்பாட்டிற்குக் கட்சிகள் இணைந்த ஆதரவை வழங்குவதுடன் சமாதானப் பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்க வேண்டும் எனத் தெரிவித்ததோடு கட்சிகள் இணைந்து போர்நிறுத்த உடன்பாட்டிற்கு ஆதரவு தருவதற்கு ஐரோப்பிய ஆணைக்குழு வாழ்த்துத் தெரி விப்பதுடன் அவசர மனிதாபிமான உதவிகளுக்கான சந்தர்ப்பத்தை வழங்கும் வகையில் சமாதான முயற்சிகளை சரியான திசையில் முன்னெடுத்துப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கச் சகலதரப்பினரும் ஆதரவு வழங்கவேண்டும். எனக் கேட்டுக் கொண்டதுடன் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படுவதில் காட்டப்படும் தாமதம் குறித்து ஆழ்ந்த கவ லையை வெளியிட்டார்.

திரு.ஜோவன்கீன் மேலும் தெரிவிக்கையில் போர்நிறுத்த உடன்பாட்டில் கைச்சாத்திட்டுள்ள இரு தரப்பினரும் தமது மக்களுக்கு குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களுக்கு சமா தானத்தின் பிரதிபலன்களை விநியோகிக்கும் ஆர்வமுள்ள பொறுப் பாளிகளாய் இருப்பர்.

சமாதான நடவடிக்கையின் முன்னெடுப்பை நோக்கி ஐரோப்பிய ஒன்றியம் அவசர மனிதாபிமான உதவிகளுக்கான விசேட ஆலோசனையுடன் உள்ளது என்றார். முன்னதாக விடுதலைப்புலிகளின் தூதுக் குழுவினர் பெல்ஜியம் வெளிவிவகார அமைச்சின் ஆசியத் திணைக்களத் தலைவர் கிறிஸ்ரியன் மொனோயர் மற்றும் உத்தி யோகத்தர் பௌஸ்மர் ஆகியோரை அமைச்சுக் கட்டடத்தில் சந்தித்து விரிவான கலந்துரையாடல்களை நடத்தினர். இதில் தற்போதைய அரசியல் நிலவரம், போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான மனிதாபிமான உதவிகள் குறித்து ஆராயப்பட்டது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.